'எனகணவர் எத்தனைநாள் உயிர்வாழ்வாரோ'

Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49 மலர் 10 இதழ் 29

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி

மாசி 27 ஜுல்ஹஜ் 10 ஞாயிற்றுக்கிழமை (10-3-68)

## சௌந்தராவின் மனைவி கவலை

லண்டன், மார்ச் 9

மோசடிக் குற்றச்சாட்டின்மீது 8 வருடச் சிறைத் தண்டனை பெற்றிருக்கும் இலங்கையைச் சேர்ந்த டாக்டர் எமில் சௌந்தரநாயகத்தின் மனைவியை பத்திரிகை நிருபர் ஒருவர் பேட்டி கண்டபோது பிரிட்டிஷ் சிறைச்சாலையில் ஒரு மாதம்கூட தனது கணவர் உயிர் வாழ்வாரா என்பது தமக்கு சந்தேகமாக இருக்கிறதென்றும் அவரது உடல் நிலை அவ்வளவு மோசமடைந்திருக்கிறதென்றும் அவர் சொன்னார்.

"நினைத்தது எதையும் சாதிக்காமல்விட்டது அவரது வாழ்வில் கிடையாது. என்னை அவர் காதலித்தபோது எங்கள் திருமணத்துக்கு எனது தந்தையார் மனம் ஒப்பவில்லை. ஆனால் அவர் [சௌந்தரா] சளைக்கவில்லை. எந்த இடையூறும் அவர் நினைத்ததைச் செய்யத் தடையாக இருந்ததில்லை" என்று திருமதி

(5-ம் பக்கம் பார்க்க]

# பொருளாதார நெருக்கடியை இலங்கை கடந்து விட்டது

## 1970-ம் ஆண்டில் உணவில் தன்னிறைவு

## உலக வங்கி அறிக்கை

கொழும்பு, சனி

1965-ம் ஆண்டின் பின் இலங்கை தனது பொருளாதார நெருக்கடியைக் கடந்து விட்டதென்றும் உள்நாட்டு உற்பத்தியில் குறிப்பாக உணவுற்பத்தியில் அது வெகுவாக முன்னேறியிருக்கிறதென்றும் இப்போதுள்ள நிலையைக் கவனிக்கையில் 1970-ம் ஆண்டில் உணவு உற்பத்தியில் அது தன்னிறைவு பெறுமென்றும் உலக வங்கி தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

"பாரிசில் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் இலங்கைக்கு உதவி செய்ய முன்வந்துள்ள நாடுகளின் மகாநாடு இந்த அறிக்கையை இப்போது பரிசிலனை செய்து வருகிறது.

"1965-ம் ஆண்டின் பின்னர் இலங்கையின் பொருளாதார நிலையில் அபிவிருத்தி ஏற்பட்டு வந்துள்ளது

[5-ம் பக்கம் பார்க்க)

## ராமநாதபுரம், வடஆற்காடு மாவட்டங்களில் புகலிடம்

### இலங்கையிலிருந்து தாயகம் திரும்புகிறவர்களுக்கு வசதிகள்

சென்னை, மார்ச் 9

இலங்கையிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பிவரவிருக்கும் இந்திய வம்சாவழியினரை குடியமர்த்துவதற்கு ராமநாதபுரம், வடஆற்காடு ஆகிய மாவட்டங்களில் வசதிகள் செய்துகொடுக்க தமிழக அரசு ஏற்பாடுகள் செய்துவருகின்றது.

தாயகம் திரும்பும் இந்தியர்களுக்காக தமிழ்நாடு அரசாங்கம் மேற்கொள்ளும் புனர்வாழ்வுத்திட்டங்கள் பற்றி இன்று மத்திய புனர்வாழ்வுதுறை ஸ்டேட் மந்திரி திரு. ஜெய்சுக்கலால் ஹாத்தி தமிழக அரசின் அதிகாரிகளுடன் ஆலோசனைகள் நடத்தினர்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் தென்னந்தோட்டங்களில் இந்தமக்களில் ஒரு பகுதியினரை குடியமர்த்துவதற்கும், வடஆற்காடு மாவட்டத்தில் நிலங்கள் கொடுத்து குடியமர்த்தவும் ஏற்பாடுகள் செய்யப்படுவதாக மந்திரியிடம் தமிழக அதிகாரிகள் தெரிவித்தனர். ——

## தி. மு. க. தலைவர் அன்பழகன் தாக்கப்பட்டார்

### சபையில் சம்பவம் பற்றி பிரஸ்தாபம்

சென்னை, மார்ச் 9

நேற்று, தி. மு க.ப் பிரமுகரான திரு. அன்பழகன் சென்னை எழும்பூர் ரயில் நிலயத்தின் முன்வைத்து ஒரு கூட்டத்தினரால் தாக்கப்பட்ட சம்பவம் பற்றித் தமிழக மேல்சட்ட சபையில் இடதுசாரி மார்க்ஸிய அங்கத்தவர் திரு. எஸ். கோவிந்தராஜனும் சுதந்திரக்கட்சி அங்கத்தவர் திரு. ஹாண்டேயும் தனித்தனியே இரண்டு ஒத்திவைப்புப் பிரேரணைகளை இன்று கொண்டு வந்தனர். சபாநாயகர் இவ்விரண்டு பிரேரணைகளையும் நிராகரித்துவிட்டார்.

சபைத் தலைவர் திரு. நெடுஞ்செழியன் பேசுகையில், இத்தகைய சம்பவங்கள் வருந்தத்தக்கவையென்றாலும், இச்சம்பவம் பற்றிப் பொலிசார் தக்க நடவடிக்கைகள் எடுத்துவருவதாகவும், இது அன்றாட அலுவல்களுக்குட்பட்ட ஒரு விஷயமென்பதுடன், விசாரணை நடந்துகொண்டிருக்கும் விஷயம் என்ற முறையிலும் சபை ஒத்திவைப்புப் பிரேரணைகளை அனுமதிக்க முடி யாதென்றார்.

இச்சம்பவம் குறித்துப் பொலிசார் 6 பேரைக் கைது செய்துள்ளதாகவும் திரு. நெடுஞ்செழியன் கூறினார். இவர்கள் மீது பொலிசார் வழக்குத்தாக்கல் செய்வார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

## புதிய முறையில் ஆங்கில வினாப்பத்திரம்

புன்னாலைக்கட்டுவன், சனி

1969-ம் ஆண்டு தொடக்கம் ஜி. சி. ஈ. [சாதாரண] பரீட்சைக்குரிய ஆங்கில பாட வினாப்பத்திரம் மும்மொழிகளிலும் வினாக்கள் கொண்டதாக இருக்கும். கிரகித்தற் பயிற்சிக்காய வினாக்களுக்குரிய விடைகள் மும்மொழிகளில் ஏதாவதொன்றில் எழுதலாம். சாரம் எழுதுவதற்கென ஒரு பந்தி தரப்படும். இப்பத்திரத்தில், அதுவும் எம்மொழியிலும் எழுதலாமெனக் கூறப்பட்டுள்ளது.

[5ம் பக்கம் பார்க்க]

## புத்தளத்தில் சூறுவளியும் மழையும்

புத்தளம், சனி

மூன்றுமாதகாலமாக இப்பகுதியில் கடுமையான கோடை அடித்து வந்தது. விவசாயிகள் பெரிதும் கவலைப்பட்டுக் கொண்டிருக்கையில் சென்றவியாழக்கிழமை பகல் ஒரு மணியளவில் சூறுவளி வீசியது. கூழம் குப்பைகள் பத்துநிமிடமாக ஒரிடத்திலேயே சுழன்றுகொண்டிருந்தது. ஒரு பசுக்கன்று சுழன்றுசுழன்று 1/4 மைலுக்கப்பால் வீசப்பட்டது.

புத்தளம் சகிரா மகாவித்தியாலய விஞ்ஞானகூடத்

(8-ம் பக்கம் பார்க்க)

## மாணவர்களுக்கு விடுமுறையில் வேலை

கொழும்பு, சனி

விடுமுறைகாலத்தில் விவசாயம், கைத்தொழிலில் ஈடுபட்டுபயிற்சி பெறவும்அதே சமயம் பணம் சம்பாதிக்கவும்மாணவர்க்கு வசதி செய்யும் ஒரு திட்டத்தை கல்வி அமைச்சு இப்போது ஆராய்ந்து வருகிறது.

வசதிகுறைந்த குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள்விடுமுறைகாலத்தில் வேலை செய்து தங்கள்கல்விச் செலவுக்கு வருமானம் தேடக்கூடியதாக இத்திட்டம்தயாரிக்கப்படுமாம்.

இத்திட்டத்தினால் வேலையற்றோருக்கு வேலைவாய்ப்புக்கிடைப்பது தடைபடமாட்டாதெனவும் கல்வி அமைச்சு அதிகாரிகள் கூறினர்.

சிறந்த அலுமினிய பாத்திரங்களுக்கு

டொலர் அலுமினியம்

ONE-DOLLAR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கார்:
1 சிறீ 5149 போர்ட் பிறிபெக்ட், நல்ல நிலையில் தனிப்பாவிப்புக்குரிய கார் விற்பனைக்குண்டு. பங்குனி 12-ம், 13-ம் திகதிகளில் பார்வையிடலாம். 46/2, கொழும்புத் துறை வீதி, யாழ்ப்பாணம். 1950

### கல்வி

இலங்கையில் தமிழ்ச் சுருக்கெழுத்தின் முன்னோடியும், உலகில் ஆங்கில சுருக்கெழுத்தைக் கற்பிப்பதில் கூடிய அனுபவமுள்ளவருமான வேலுப்பிள்ளை நுட்பமான முறையில் குறுகிய காலத்தில் கற்பிக்கிறார். தற்போது இரு சுருக்கெழுத்திற்கும் 110 மாணவ மாணவிகள் படிக்கிறார்கள். புதிய வகுப்புகளுக்கு விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இரு பாலாருக்கும் விடுதி வசதியுண்டு. வேலுப்பிள்ளை, வர்த்தகக் கல்லூரி, பருத்தித்துறை. 1781

### காணவில்லை

வயசு சுமார் 17. பெயர் இந்திரா. நிறம் சிவப்பு. 5-3-68ல் இருந்து காணவில்லை. கீழ்க்கண்ட விலாசத்தாருக்கு அல்லது கிட்டிய பொலிஸ்நிலையத்திற்கு சரியான தகவல் கொடுப்போருக்கு தகுந்த வெகுமதி வழங்கப்படும். இ. கமலேந்திரம், சுதுமலை வடக்கு. மானிப்பாய். 1783

## விஞ்ஞான ஆய்வுகூடம்

குரும்பசிட்டி, சனி

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் நவீன வசதிகளைக் கொண்ட புதிய விஞ்ஞான ஆய்வு கூடம் நிறுவப்படவிருக்கின்றது. இப்புதிய விஞ்ஞான ஆய்வு கூடம் அமைப்பதற்கு மேல் மாடிக் கட்டடம் நிறுவுவதற்கு அரசாங்கம் வழங்கவிருக்கும் நன்கொடை உதவிப் பணத்துடன் மீதிப் பணத்தைப் பெற்றோர் ஆசிரியர் சங்கம் சேகரிக்கவிருக்கின்றது.

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 10-3-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-45 கீர்த்தனைப் பாடல்கள், 7-25 நிகழ்ச்சி அறிவிப்பு. 7-30 குரல் வளை. 8-00 இசைவேளை, 8-15 நக்பீர், ஹட்ஸான் பெருநாள் விசேஷநிகழ்ச்சி.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்தநின வாழ்த்துக்கள். 5-30 குரல்வளை.


இரவு 6-15 நாளவாத்தியக்கச்சேரி. 6-45 பாவளம். 7-00 நேயர்விருப்பம். 7-30 விவாதமேடை. 8-00முஸ்லிம் நிகழ்ச்சி, 9-00 இசைக்கச்சேரி என். கே. பத்மநாதன்.

## ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், சனி

அளவெட்டி மேற்குச்சன சமூக நிலையத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழா இம்மாதம் 12ந்திகதி நடைபெறவிருக்கிறது.

தமிழரசுத் தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம், உடுவில்எம். பி. திரு. வி. தர்மலிங்கம் ஆகியோர் உட்படப் பல பிரமுகர்கள் விழாவில் பங்குபற்றுவார்கள். [நி.]



இப்பொழுது திரையிடப்படுகிறது!
இங்ஸ்லி [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை] வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
விஜயா [மட்டுநகர்] ஸ்ரீகிருஷ்ணா [திருமலை] விஜிதா [ஹட்டன்]
சிவாஜி கணேசன்— சாவித்திரி
ஜெமினி கணேசன், பத்மினி,
கே.ஆர்.விஜயா, தேவிகா, நாகேஷ்
மற்றும் பலர் நடிக்கும்
சரஸ்வதி சபதம்
(சஸ்ட்மென் கலர்)

## அம்பலவன் குள குடியேற்றத் திட்டம்

அளவெட்டி, சனி

படித்த வாலிபர்களுக்கும் விவசாயிகளுக்கும், கிருஷிப் பாடசாலையில் சித்தி எய்திய மாணவர்களுக்கும் அம்பலவன் குள குடியேற்றத் திட்டத்திலுள்ள 300 காணித் துண்டுகள் வழங்கப்படவிருக்கின்றன.

துணுக்காய் காரியாதிகாரியின் பிரிவில் உள்ள அம்பலப் பெருமாள் குள குடியேற்றத் திட்டத்தில் காணிகளைப் பெறவிரும்பும் படித்த வாலிபரும், விவசாயிகளும், கிருஷிப் பாடசாலையில் சித்திஎய்திய மாணவர்களும் இம்மாதம் 21-ந் திகதிக்குமுன் யாழ் அரசாங்க அதிபருக்கு விண்ணப்பிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## புனிதவதி கொலைவழக்கு

குரும்பசிட்டி, சனி

மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் புனிதவதி கொலைவழக்கு விசாரணையை மீண்டும் இம்மாதம் 14ந் தேதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

கடந்த வருடம் அக்டோபர் மாதம் 4ந் தேதி தொல்புரம் வாசியான சைம்பெண் புனிதவதி சுப்பிரமணியம் என்பவரைக் கொலை செய்ததாக இவ் வழக்கில் சுன்னாகப் பொலிஸார் அதேயிடத்தைச் சேர்ந்த ஏ. கிருஷ்ணபிள்ளை அல்லது மாயவன், பி. சுவாமிநாதன், சி. திருநாவுக்கரசு, என். தவராசா, ரி. ஜெயச்சந்திரன், டி. விநாயகம் ஆகிய ஆறு பேரில் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

முதலாம் எதிரியைத் தொடர்ந்து றிமாண்டில் வைக்க நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம், திரு. எம். குணரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானர்.

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

REGAL JAFFNA
Daily at
4-40, 7-00, & 9-45 p.m
Bob Hope &
Frankie Avalon
In
I'll Take Sweden
[in Technicolor]

4-வது வாரம்
நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
தினசரி 2-30 க்கு மெற்னி
எஸ். எஸ். ஆர். - தேவிகா
நடித்த
மறக்க முடியுமா?

MANOHARA
JAFFNA
Daily at 4-45,7-00, 9-45p.m.
[Chrisopher Lee
in
DRACULA
Prince of Darkness

77வது தினம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போராதினங்களில்4காட்சி
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா
நடித்த
காவல்காரன்

# வணிக தகுதி பரீட்சை முடிவுகள்

உடுவில், சனி

யாழ்ப்பாணத்திலுள்ளகனிஷ்ட தொழில் நுட்பப் பாடசாலையின் கழக ஆண்டு 1966—67க்கான இறுதிப் பரீட்சைப் பெறுபேறுகள் இன்று வெளியிடப் பட்டுள்ளன.

இப்பரீட்சையில் சித்திய டைந்தோர் விபரம் பின்வருமாறு:—

சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர்களுக்கான வர்த்தக தராதரப் பத்திரம் [தமிழ்]

சிவபாக்கியம் முத்துக்குமாரசுவாமி, கணபதிப்பிள்ளை மகேஸ்வரி, கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை கமலநாதன், கந்தசாமி சிவராசா, கிட்டிணன் பாவானந்தன், நாகன் கதிரவேலு, அமிர்தலிங்கம் இராசலட்சுமி, தயாபரம்பிள்ளை கௌரியாம்பாள், இராஜகோபால பிள்ளை சத்தியவதி, முருகுப்பிள்ளை சிவமணி, நடராசா சுந்தரகாமாட்சி, குமாரசாமி மங்களேஸ்வரி, முருகுப்பிள்ளை விஜயமணி, சபாரத்தினம் இராஜேந்திரம், பாலசுப்பிரமணியக் குருக்கள் நல்லநாயகிஸ்வரி, பரமலிங்கம் சுபத்திராதேவி.

சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர்களுக்கானவர்த்தக தராதரப் பத்திரம் [ஆங்கிலம்]

சபாபதி சின்னத்தம்பி பாலசுந்தரம்சுப்பிரமணியம் கணேசன், பொன்னையா புவனராணி, நவரத்தினராஜா புவனராணி, இராசரத்தின ரோஸ் வசந்தராணி.

சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர்களுக்கான உயர் வணிகத் தகுதிப் பத்திரம் [தமிழ்]

கணபதிபொன்னுத்துரை, நாகராசா சச்சிதானந்தம், சுப்பிரமணியம் இலங்கைநாயகம், நாகரத்தினம் பரமேஸ்வரி.

சுருக்கெழுத்தாளர் தகுதிப்பத்திரம் [மாலை—தமிழ்]

செல்லத்துரை விக்னேஸ்வரன்.

சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர்களுக்கான உயர்வணிகத் தகுதிப்பத்திரம் [ஆங்கிலம்]

வன்னியசிங்கம் செல்வராணி.

கணக்குப் பதிவாளர்களுக்கான உயர் வணிகத்தகுதிப் பத்திரம் (ஆங்கிலம்)

சுப்பிரமணியம் கணேசு.

கணக்குப்பதிவாளர்க்கான வணிகத் தகுதிப் பத்திரம் [தமிழ்]

பத்மநாதன் சந்தையா வீரவாகு பரமேஸ்வரன் பத்மநாதன் மகேந்திரதாசன், இராசையாஇரகுபதி, அப்பாத்துரை உபயசேகரம், நாகலிங்கம் சண்முகம், குமாரசாமி சிவசுப்பிரமணியம், சின்னத்துரை சுந்தரலிங்கம், சின்னையா செல்வராசா, கார்த்திகேசு திருக்கேசன், ஐயாத்துரை துரைராசா, ஐயாத்துரை தவமணிதேவி, யாதவராயர் இராமநாதன், வெற்றிவேலு காந்தமூர்த்தி, செல்லையா கணபதிப்பிள்ளை, சதாசிவம் சந்திரசேகர், செ. நாகலிங்கம் செல்வராசா, நாகன் தருமலிங்கம், அருளம்பலம் பழநிநாதன், மாணிக்கம் பவளநாதன், சின்னத்துரை மகேந்திரநாதன், சிவபாக்கியம் முத்துக்குமாரசுவாமி, கபிரியேற்பிள்ளை யேசகாவலன், குமாரவேலு விநாயமூர்த்தி சிவசிதம்பரம் வையித்தீஸ்வரன், கனகரத்தினம் ஜெயராமச்சந்திரன், சின்னத்துரை சரஸ்வதி. சின்னத்தம்பி சிவஞானவதி, கதிர்காமர் நிர்மலாம்பிகை, அருளம்பலம் நீலாவதி. கணபதிப்பிள்ளை மகேஸ்வரி, அப்துல் லத்தீவ் மஃசூரா.

கணபதிப்பிள்ளை திருச்செல்வவிநாகமூர்த்தி.

கணக்குப்பதிவாளர்க்கான வணிகத்தகுதிப் பத்திரம் [ஆங்கிலம்]

கந்தையா உலகநாதன், கந்தையா பாலச்சந்திரன், சுப்பையாமகேஸ்வரி.

கணக்குப்பதிவாளர்க்கான உயர்வணிகத்தகுதிப் பத்திரம் [தமிழ்]

சின்னத்துரை கமலநாதன், கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை கமலநாதன், வல்லிபுரம் கிருஷ்ணபிள்ளை, கந்தசாமி சிவராசா, தம்பாபிள்ளை காந்திமதியம்மை, தயாபரம்பிள்ளை கௌரியாம்பாள், இராஜகோபாலபிள்ளை சத்தியவதி, முருகுப்பிள்ளை விஜயமணி, முருகுப்பிள்ளை சிவமணி, கணபதி பொன்னுத்துரை.

## திருட்டை தடுக்க படகு வரும்

நல்லூர், சனி

யாழ்ப்பாணத்தில சிறுகுவலைத் திருட்டைத் தடுக்க அதிவேகமாகஇயங்கும்இயந்திரப்படகொன்று விரைவில் இங்குவரவிருக்கிறது.

இப் படகில் ஆயுதம் தாங்கிய பொலிஸாரும் மீன்பிடி இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகளும்சேர்ந்துசுற்றி வருவர். இப்படகின்உதவியுடன் வடபகுதியில் நடைபெற்று வரும் சிறுகுவலைதிருட்டை கட்டுப் படுத்தலாமென நம்பப்படுகிறது.

## இடமாற்றம்

உடுப்பிட்டி, சனி

வரணி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தலைமையாசிரியராகக் கடமையாற்றிய திரு. வ. தர்மலிங்கம், முதலாந்தர தலைமையாசிரியராக பதவி உயர்வு பெற்று வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## ரூ. 350 அபராதம்

குரும்பசிட்டி, சனி

உரும்பராயைச் சேர்ந்த அரியரத்தினம் செல்வரத்தினம் என்பவர் மீது சட்டவிரோதமாக 648 டிரும் கோடாவை வைத்திருந்ததாக சுன்னாகம் பொலிசாரால் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்டிருந்த வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு எம். சண்முகலிங்கம் எதிரிக்கு 350 ரூபா அபராதம் விதித்தார்.

## இதில் அக்கறையில்லை

சங்கானை, சனி

குடும்பக் கட்டுப்பாட்டை அமுல் நடாத்துவதற்கு அரசினர் அதிக பணம் செலவிட்டு அதற்கான மருந்து வகைகளும் உபகரணங்களும் பாவனைக்கு வழங்கி வந்தும் பொதுமக்கள் இதில் அதிக ஆர்வம் காட்டுவவதாக தெரியவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் மேற்குப்பகுதிக்கென மானிப்பாயில் இருக்கும் சுகாதாரக்கந்தோரில் குடும்பக்கட்டுப்பாட்டுக்கான மருந்துவில்லைகளும் பாவனைக்கான உபகரணங்கள் இருந்தும் குடும்பத்தில் ஐந்து பிள்ளைகளுக்கு மேற்பட உள்ளவர்களும் இதில் ஆர்வம் காட்டாது விடுகின்றனர் என சுகாதார ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கு ஆசியா

# டாக்டர் ஜாரிங்கின் ஆலோசனையை ஐ. அ. கு. நிராகரித்தது

கெய்ரோ, மார்ச் 9

மேற்கு ஆசியப் பிரச்னையைத் தீர்க்குமுகமாக அரபு நாடுகளும் இஸ்ரேலும் சந்தித்துப் பேசவேண்டுமென்ற மேற்கு ஆசிய ஐ. நா. விசேஷ பிரதிநிதி டாக்டர் ஜாரிங்கின் ஆலோசனையை ஐக்கிய அரபுக்குடியரசு நிராகரித்துவிட்டதாகஇங்கு அறிவிக்கப்பட்டுளது.

இத்தகவலை செல்வாக்குள்ள ஐ. அ. கு. பத்திரிகையான 'அல் அஹ்ராம்' வெளியிட்டுள்ளது.

அரபு நாடுகள், இஸ்ரேல் பிரதிநிதிகளைச் சந்தித்து பேச, சைப்பிரசுக்குத்தமது பிரதிநிதிகளை அனுப்பிவைக்கவேண்டுமென டாக்டர் ஜாரிங் தெரிவித்திருந்த ஆலோசனையை ஐ. அ. கு ஏற்க மறுத்துவிட்டது.

கடந்த வியாழனன்று, ஐ. அ. கு. வெளியுறவு மந்திரி திரு. முகம்மது ரியாட்டை டாக்டர் ஜாரிங் சந்தித்துப் பேசுகையிலேயே அவர் இந்த ஆலோசனையை வெளியிட்டதாகவும், ஆனல் திரு ரியாட் அதை நிராகரித்துவிட்டதாகவும் 'அல் அஹ்ராம் மேலும் குறிப்பிட்டுளது.

இப்பத்திரிகைச் செய்தியைத்தொடர்ந்து, டாக்டர் ஜாரிங்கின் சமாதான விஜயம் எவ்வித முன்னேற்றமும் காணவில்லையெனவும், அவரது சமரச முயற்சிகள் ஒரு நெருக்கடி நிலையை அடைந்துள்ளதாகவும் ஐ. அ. கு. வட்டாரங்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளன.

## பி.பி.ஸி.கோஷ்டி மீது புகைக்குண்டு

### ஜெர்மனியில் சம்பவம்

பெர்லின், மார்ச் 9

கிழக்கு. மேற்கு ஜெர்மனிகளைப் பிரிக்கும் எல்லையிலிருந்து, படங்கள் சிலவற்றை எடுக்க முயன்ற பிரிட்டிஷ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கோஷ்டியொன்றின்மீது கிழக்குஜெர்மனிப் பொலிசார் நான்கு புகைக்குண்டுகளை வீசினர். இப்புகைக்குண்டுகள் வீசப்பட்டதும் கோஷ்டி தொடர்ந்து தனது படப்பிடிப்பை நடத்தமுடியவில்லை.

## பாகிஸ்தான் இளைஞர் தீ மூட்டித் தற்கொலை

### வியட்னும் போரை எதிர்த்து

கராசி, மார்ச் 9

வியட்னும் போருக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக ஒரு பாகிஸ்தானிய இளைஞர் தமது உடல்மீது மண்ணெண்ணை ஊற்றித் தீ வைத்து இறந்தார். இச்சம்பவம், லாகூரிலிருந்து 40 மைல் தூரத்திலுள்ள கிராமமொன்றில் நடந்தது

தென்வியட்னும் அரச பட்டினமான ஹியூவை வடவியட்னும்மியரிடமிருந்து தென்வியட்னுமியர் மீண்டும் கைப்பற்றிவிட்டனர் என்ற செய்தியைக் கேட்டு மனமுடைந்த நசுருல்லாகான் என்ற இவ்விளைஞன், ஒரு வயலுக்குச் சென்று தனக்குத்தானே தீமூட்டிக் கொண்டான்.

## சியாட்டோ மாநாடு பிரிட்டிஷ் தூதுகோஷ்டி தலைவர்

லண்டன், மார்ச்9

நியூஸிலாந்து தலைநகரான வெலிங்டனில் அடுத்த மாதம் 2ம், 3ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் தென்கிழக்காசிய பாதுகாப்பு ஒப்பந்த நாடுகள் மாநாட்டுக்குச் செல்லும் பிரிட்டிஷ் தூதுகோஷ்டிக்குச் சாம்ராஜ்ய காரியதரிசி திரு. ஜோர்ஜ் தொம்ஸன் தலைமை தாங்குவார்.

## சுரங்கத்தில் 21 பேர்மரணம்

லூஸியாளு, மார்ச்9

அமெரிக்காவிலுள்ள லூஸியாளு என்னும் இடத்தில், ஓர் உப்புப் சுரங்கத்தினுள் அகப்பட்டுக்கொண்ட 21 சுரங்கத் தொழிலாளிகள் மரணமடைந்தனர்

உலகின்

# வருடாந்த தான்ய அறுவடை

## மூன்றில் ஒரு பகுதி நோயினல்நாசம்

பொன், மார்ச் 9

உலகின் வருடாந்த தான்ய அறுவடையில் மூன்றில் ஒருபகுதி பயிர்க்கிருமிகள், தொற்று நோய்கள், மற்றும் காரணங்களினல் இழக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுளது.

சர்வதேச பூச்சி மருந்து உற்பத்தி நிறுவனமான 'பேயர்' நடத்திய கணக்கெடுப்பொன்றில் இத்தகவல்வெளியிடப்பட்டுளது.

இந்தத் தான்ய இழப்பைப் பணத்தில் கணக்கெடுத்தால், 700 தொடக்கம் 900 கோடி டொலராகுமெனத் தெரிகிறது.

பிரேஸிலில்

## வெள்ளத்துக்கு 26 பேர் பலி

பிரஸிலியா, மார்ச் 9

பிரேஸிலில் நேற்று ஏற்பட்ட வெள்ளத்தில் குறைந்தது 26 பேராவது உயிரிழந்ததாகவும், சுமார் 2,000 பேர் வீடிழந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

பெருமழையினல் ஏற்பட்ட இவ்வெள்ளம், வீடுகள், பயிர்களையும் அழித்ததுடன் போக்குவரத்துத் தொடர்புகளையும் துண்டித்துவிட்டது.

# வார்சோ ஒப்பந்த நாடுகள் மாநாடு

## அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்த விவாதம்

சோபியா, மார்ச் 9

சோபியாவில் இரு தினங்கள்கூடி முடிவடைந்துள்ள வார்சோ ஒப்பந்த நாடுகளின் மாநாடு, ரஷ்யாவும் அமெரிக்காவும் இணைந்து தயாரித்த அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தை அங்கத்துவ நாடுகள் ஏற்றுக்கொள்ளவேண்டுமெனக் கேட்டுக்கொண்டுள்ளது.

அணு ஆயுத பரவல்தடை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட ருமேனியா மறுத்விட்டதாக கூறப்படுகிறது. ஒப்பந்தம், அணு ஆயுதம் உற்பத்தி செய்யும் வல்லரசுகளையும் கட்டுப்படுத்தவேண்டுமென்றும்அவற்றிடம் உள்ள அணு ஆயுதங்களின்தொகை குறைக்கப்படவேண்டுமெனவும் ருமேனியா வலியுறுத்தியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனல், ஒப்பந்தத்தில் எவ்வித மாற்றமும் செய்ய ரஷ்யா மறுத்துவிட்டதாகவும் கூறப்பட்டது.

ரொடீஷியாவில்

# மேலும் 6 ஆபிரிக்கருக்கு திங்களன்று தூக்கு

சலிஸ்பரி, மார்ச் 9

ரொடீஷியாவில் மரண தண்டனைவிதிக்கப்பட்டுள்ள 115 ஆபிரிக்கர்களில், 6 ஆபிரிக்கர்கள் ரொடீஷிய மத்திய சிறையில் திங்கட்கிழமை காலை தூக்கிலிடப்படுவார்கள் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன ஏற்கனவே 8ஆபிரிக்கர்கள் தூக்கிலிடப்பட்டது வாசகர்கள் தெரிந்ததே.

இதற்கிடையில், ஐ நா. மனித உரிமைகள் கமிஷன் மேலும் ஆபிரிக்கர்களை ரொடீஷிய அரசாங்கம் தூக்கிலிடுவதைத்தடுத்துநிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் தந்தி அனுப்பியுள்ளது. அத்துடன், ரொடீஷிய அரசாங்கம் சிறைப்படுத்தியுள்ள அரசியற் கைதிகள் யாவரையும் விடுதலை செய்யவும் பிரிட்டிஷ் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கமிஷன் தனது தந்தியில் கேட்டுள்ளது

### புதுடில்லியில் எதிர்ப்பு

புதுடில்லியில், [illegible] கோர்ட் வழக்கறிஞர் [illegible] பேருக்குமதிகமானோர், ஆபிரிக்கர்களைத் தூக்கிலிட்ட நடவடிக்கையை ஆட்சேபித்து ரொடீஷிய அரசாங்கத்துக்குக் கடிதம் அனுப்பியுள்ளனர்.

புதுடில்லியிலுள்ள பிரிட்டிஷ் உதவி ஹைகமிஷனரின் காரியாலயத்தின் முன்னிலையில், சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

கல்கத்தாவில் ஆபிரிக்க மாணவர் ஒருவர் [illegible] பிரிட்டிஷ் ஸ்தானிகராலயத் [illegible] கொடி பிடித்துக்கொண்டு நின்றார்.

# அமெரிக்க நகரில் இனக் கலவரங்கள்

எல்டொராடோ, மார்ச்9

அமெரிக்காவில், ஆர்க்கன்ஸாவிலுள்ள எல் டொராடோவென்னும் இடத்தில் நேற்றிரவு 60 நீக்ரோ இளைஞர்களைக்கொண்ட ஒரு வன்முறைக் கும்பலொன்றைப் பொலிசார் கண்ணீர்ப்புகை பிரயோகம் செய்தனர். இந்த இளைஞர்கள், வழியில் சென்ற கார்கள்மீது கற்களையும் போத்தல்களையும் எறிந்தனர்.

வெள்ளை, நீக்ரோ இளைஞர்கள் முதலில் கலவரங்களை உண்டாக்கியதைத் தொடர்ந்து, அதிகாரிகள் இந்நகரில் அவசரகால நிலைச்சட்டத்தை அமுலில் நடத்திச்சிலமணி நேரத்தினுள், பொலிசார் வன்முறைக் கும்பலைக் கலைத்தனர். பலர்கைது செய்யப்பட்டனர்; ஆனல் கலவரங்களில்யாரும் உயிர்ச்சேதமடையவில்லை.

பத்தொன்பது வயது நீக்ரோ இளைஞன் ஒருவனைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த 17 வயது வெள்ளை இளைஞனை, வழக்கை விசாரித்த நீதிமன்றம் கடந்த வாரம் விடுதலை செய்ததைத் தொடர்ந்தே இக்கலவரங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

# தமையனின் 5 குழந்தைகளை தம்பி கொன்றுன்

## தனக்குத் திருமண ஒழுங்குகள் செய்யவில்லை என்ற கோபத்தில்

ஹைதராபாத், மார்ச்9

தனது திருமணத்துக்கான ஒழுங்குகளைத் தனது தமையன் செய்யவில்லையென்ற காரணத்துக்காக 25 வயது இளைஞன் ஒருவன், தனது தமையனின் ஐந்து பிள்ளைகளையும் கொன்றுவிட்டான் இத்தகவலைப் பொலிஸார் இங்கு அறிவித்தனர்.

இரண்டுமாதப் பெண் குழந்தையொன்றுக்கு அவன் நிற்றிக்அஸிட் குடிக்கக்கொடுத்தான்என்றும், மூன்றுக்கும் பத்துக்குமிடையேயான வயதுள்ள நான்கு சிறுவர்களை கிராமத்திலுள்ள கிணறென்றினுள் வீசியதாகவும்பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

ஆந்திரப்பிரதேசத்திலுள்ள உறவக்கொண்டா என்னுமிடத்திலேயே இக்கோரசிசம்பவம் நடைபெற்றது.

## இந்தியப் பிரஜாவுரிமை பெற்றவர்கள்

கொழும்பு. சனி

சென்ற மாதத்தில் 1189 பேருக்கு இந்திய பிரஜா உரிமை வழங்கப்பட்டதாக இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷன தெரிவித்துள்ளது.

1964-ம் வருடம் அக்டோபர் 30-ம் திகதி கைச்சாத்தான இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்கீழ் இதுவரை 19,207 பேருக்கு இந்திய பிரஜா உரிமை வழங்கப்பட்டுள்ளது.

இத்தொகையில் 4751 பேர் தாமாகவே விரும்பி இந்தியா சென்றுள்ளார்கள்.

## இணைப்பு விமான உற்பத்தி

கராச்சி, மார்ச்9

விமான உற்பத்தியில் இணைந்துசெயலாற்றும் சாத்தியக்கூறுகள் பற்றி பாகிஸ்தானும் இந்தோனேஷியாவும் ஆராய்ந்து வருகின்றன.

அண்மையில் ஜக்கார்த்தாவில் இந்தோனேஷியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்திவிட்டுத் திரும்பிய பாகிஸ்தான் வெளியுறவுமந்திரி திரு. பிர்ஸாடா இத்தகவலை வெளியிட்டார்.

## அடையாளம் காட்டப்படவில்லை

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஆனைக்கோட்டைகாரக் கொலை சந்தேக நபர்களில் ஒருவரான மரிசலின் என்பவர் நேற்றுமுன்தினம் அடையாள அணிவகுப்பில் அடையாளம் காட்டப்படவில்லை.

இந்த வருடம் பெப்ரவரி மாதம் 16-ம் திகதி ஆனைக்கோட்டையில் காணுமல்போன 6000 ரூபா பெறுமதியான காரொன்று சம்பந்தமாக நாகராசா, மரிசலின் ஆகிய இருவரையும் சந்தேகத்தின்பேரில் வேலணையில்வைத்துக் கைதுசெய்தனர்.

நேற்று யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில நடைபெற்றஅடையாள அணிவகுப்பில் மரிசலினை யாஅடையாளம் காட்டப்படாததைத் தொடர்ந்து வழக்கு மேலும்இம்மாதம்30ம்திகதி ஒத்திவைக்கப்பட்டது களவுபோன கார் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனைக்கோட்டை பொலிசார் வழக்கை நடத்தினர். [கா. நி.]

## ஜெனரல் நீவின் இந்தியா வருகிருர்

புதுடில்லி, மார்ச் 9

பர்மாவின் தலைவரான ஜெனரல் நீவின், இந்தியாவுக்கு உத்தியோகபூர்வமற்ற சிநேகிதபூர்வமான விஜயம் மேற்கொள்ளவிருக்கிருர் அவர் இம்மாதம்15-ந் திகதி இந்தியா வந்துசேருவார்.

இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் அழைப்பையேற்றே ஜெனரல் நீவின் இந்தியா வருகிருர். அவருடன் அவரது பாரியாரும் வருவார்.

## 200 கீன்ய ஆசியர்

நைரோபி, மார்ச் 9

பிரிட்டிஷ் அல்லது இந்திய பாஸ்போர்ட் வைத்துள்ள 200 கீன்ய ஆசியர்களை, இன்னும் 30 நாட்களில் கீன்யாவை விட்டுச் செல்லுமாறு கீன்யா அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது இந்தப் பாஸ்போர்ட்கள் முறையானவையல்ல வென்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

## 'தமிழ்க்கொலை'

சங்கானை, சனி

சிங்களப் பரீட்சை எடுப்பதற்கு விண்ணப்பித்திருந்த உள்ளூர் ஆட்சிமன்ற தமிழ் ஊழியர்களுக்குக் கிடைக்கப்பெற்ற விண்ணப்பப்பத்திரங்கள் ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளதாம்.

பத்திரத்தில் கேட்கப்பட்டிருந்த வினக்கள் யாவும் தமிழ்க்கொலைசெய்யப்பட்டு விளங்கிக் கொள்ள முடியாதவகையில் இருந்ததே இதற்குக் காரணமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

இன்பமும் துன்பமும் நமது சொந்த சிருஷ்டிகள். இன்றைய நமது நிலைக்கு நாமேதான் காரணம். திருவருளைப் பெற்ருல் நமக்கு இன்பமே எந்நாளும் துன்பமில்லை.

— சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க வருஷம் மாசி மாதம் 27ம்திகதி [10-3-68]

## பத்திரிகைச்சபை மசோதா

பத்திரிகைச் சபையொன்றை அமைப்பதற்கான மசோதா விரைவில் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படவிருப்பதாக ஆளும் கட்சிக் குழுக்கூட்டத்தில் பிரதமர் தகவல் வெளியிட்டிருக்கிருர். அந்த மசோதாவின்நோக்கத்தைப்பற்றி சுருக்கமாகக் கூறுகையில், சகலபத்திரிகைகளும் பொறுப்புடனும் எச்சரிக்கையுடனும் நடந்துகொள்ள இந்த மசோதா நிர்ப்பந்தப்படுத்தும்என்று பிரதமர் தெரிவித்தாராம். பத்திரிகைகள் பொறுப்புடனும் எச்சரிக்கையுடனும் நடந்து கொள்வதற்குஅவைகளை நிர்ப்பந்திப்பதற்கான நடவடிக்கைகளைப் பிரதமர் மேற்கொள்ளும் அதேசமயம் 'முதலாளித்துவ பத்திரிகைகளை' எதிர்க்கட்சித் தலைவரும் முன்னள் பிரதமருமான திருமதி சிறிமா பண்டாரநாயகா பகிரங்கமாகக் கண்டித்திருக்கிருர். பத்திரிகைகளைக் கட்டுப்படுத்துவதற்கு முயற்சிசெய்து பலமசோதாக்களைத் தயாரித்து இறுதியில் ஆட்சிபீடத்திலிருந்தே நீங்கிய, பத்திரிகைகளுக்கு எதிரியாகக் கருதப்பட்ட திருமதி சிறிமாபண்டாரநாயகாவும், பத்திரிகை ஜனநாயகத்துக்கு ஆபத்துஏற்படாமல் தடுத்து ஜனநாயகத்தைக் காப்பாற்றி, பத்திரிகைகளின் 'நண்பன்'எனக் கருதப்பட்ட இன்றைய பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவும் பத்திரிகைகளைப் பொறுத்த வரையில் இன்று பெரும் பாலும் ஒரே கருத்தை உடையவர்களாகத்தோன்றுகிறது. ஆனல் திருமதி சிறிமா பண்டாரநாயகா 'முதலாளித்துவ பத்திரிகைகள்' என ஒரு சில பத்திரிகைகள் மீது ஆத்திரம் கொள்கிருர். 'மத்தியப் பத்திரிகைகள்' எனக் கூறிக்கொள்ளும் சில பத்திரிகைகள் சில சில சமயங்களில் நடந்துகொள்ளும் முறையைக் கண்டும் இடதுசாரிப் பத்திரிகைகள் தம்மையும் தமது அரசாங்கத்தைப் பற்றியும் கடைபிடிக்கும் முறையைப் பார்த்தும்கோபம் கொள்கிருர்.

பத்திரிகைச் சுதந்திரம் ஜனநாயக வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் மிக மிக அவசியம். இந்தச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதோ, பறித்தெடுப்பதோ ஜனநாயக சுதந்திரத்துக்குக் குழிதோண்டுவதாகவே இருக்கும். ஆனல் சுதந்திரம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டால் அதை எவர்தான் சகித்துக்கொள்ள முடியும்? நமது நாட்டில் வெளிவரும் கட்சிப் பத்திரிகைகளும் தேசியப் பத்திரிகைகள் என்று கூறிக்கொள்ளும் பத்திரிகைகள் சிலவும் பத்திரிகைச் சுதந்திரத்தை சரியான முறையில் பயன்படுத்துகின்றனவா? பொறுப்புடன் நடந்து கொள்கின்றனவா?

தனிப்பட்டவர் மீதும், பொது ஸ்தாபனங்கள் மீதும் மட்டுமல்லாமல் சமூகங்கள்மீதும் மறைமுகமாகவும், நேரடியாகவும் தம் இச்சைப்படி பழி சுமத்துவதையும் ஜனநாயக வாழ்க்கை முறைக்கே தமது விருப்பப்படி வியாக்கியானம் செய்வதையும் இதன் மூலம் ஒரு சமூகத்துக்கு எதிராக மற்ருெரு சமூகத்தினரையும் ஒரு பிரிவினருக்கு எதிராக மற்ருெரு பிரிவினரையும், ஓர் அரசியல் கட்சிக்கு எதிராக மற்ருேர் அரசியல் கட்சியையும் நேரடியாகவும், மறைமுகமாகவும் சிண்டு முடித்துவிடுவதையும் மோதவிடுவதையும் இங்கு காண்கிருேம். நாட்டில் தேசிய ஐக்கியம் குலைந்ததற்கும் மொழிப் பிரச்னைக்குத் தீர்வு காணமுடியாமல் மேலும் மேலும் அது பிரச்னையாக நீடித்துவருவதற்கும் இங்குள்ள சில பத்திரிகைகளும் காரணமென்று சொல்லலாம். பத்திரிகைகள் தங்கள் சுதந்திரத்தைச் சரியாகப் பயன்படுத்தவும், பொறுப்புடன் நடந்து கொள்ளவும் அரசாங்கம் சட்டம் கொண்டுவர வேண்டியது அவசியம்தானு?

இப்போதுகூட இதற்கு அவசியமில்லை. இலங்கையில் உள்ள சகல பத்திரிகையாளர்களையும் கொண்ட பத்திரிகைச் சபை ஒன்றை அவர்களே அமைத்து, தேசிய ஒற்றுமையையும், நாட்டின் முன்னேற்றத்தையும் குறிக்கோளாகக்கொண்டு தமக்கென ஒரு நெறிமுறைக் கோட்பாடு ஒன்றை வகுத்து அதன்படி செயற்படமுன்வந்தால் அரசாங்கம் சட்டம் கொண்டுவந்து பொறுப்புடன் நடந்துகொள்ள நிர்ப்பந்திக்க வேண்டிய அவசியமேற்படாது.

# தியாகத் திருநாள் ஹஜ் பெருநாள்

—ஹாஜி வி. எம். எம் அபூசாலிஹ்—

இஸ்லாம் காட்டும் இறையன்பும் அவ்விறை அன்பின் இலட்சியமாம், சகோதரத்துவத்தை நாம் இன்று நம்மிடையே மிளிரும் ஹஜ்எனும் புனிதக் கடமையில் காணக்கூடியதாவுள்ளது. உலகின் ஒவ்வொரு பகுதிகளில் இருந்தும் மக்கள் புனித மக்காமா நகரில் குழுமி இருப்பதை இன்று நாம் மக்கமா நகரினை நேரில் காணுவிடினும் அகக்கண்ணுல் காணக்கூடியதாயுள்ளது. இஸ்லாம்கூறும் ஐம்பெரும் கடமையாம். புனிதஹஜ்ஜை நிறைவேற்றவே இவர்கள் கூடியுள்ளார்கள்.

புனித ஹஜ்ஜினை நிறைவேற்ற மக்கள் கூடுகிருர்கள் என்ருல் போதாது. ஆனல் எந் நோக்கத்திற்காகக் கூடுகிருர்கள் என நாம் ஆராய வேண்டும். சாந்தி, மதம், இஸ்லாம், சுதந்திரம், சமத்துவம் சகோதரத்துவ அடிப்படையில் உருவானது. தான் இஸ்லாம். ஆகவே தான் இஸ்லாம்கூறும் சகோதரத்துவ கோட்பாட்டைநிலைநிறுத்த நந்நபிநாதர்காட்டிய வழியை அன்றுதொட்டு இன்றுவரை நடைமுறையில் கொண்டுவரும் ஒரே மார்க்கம்தான் புனித ஹஜ்ஜாகும். அது மட்டுமன்றி தியாகத்தின் அடிப்படையில் உருவானதுதான் ஹஜ்ஜாகும்.

நபிகள் நாதர் தோன்று முன்னர் இப்ராஹிம் நபி அவர்கள் தோன்றினுர்கள். இவர்கள் தாம் கண்ட கனவை நிறைவேற்ற தம் அருமை மகனுர் இஸ்மாயீலை பலியிட முன்வந்தார்கள். இதுவே புனித ஹஜ்ஜின் புனித தியாகமாகும். இச்சம்பவத்தை இன்று நினைவு கூறும் முகமாகவே புனித ஹஜ் யாத்திரை நடைபெற்றுவருகிறது.

புனித ஹஜ்ஜின் அடுத்த மகத்துவம் பற்றி நோக்கின் எவரும் அதிசயிக்காதிருக்க முடியாது ஏனெனில் உலகின் எப்பக்கமிருந்தாலும் மக்கள் ஒருங்கு கூடுவது ஒரே இடம் மக்காவாகும். அவர்கள் இன, மொழி, மத வேறுபாடின்றி ஒன்று கூடும் நிலையே. கறுப்பர், வெள்ளையர், உயர்ந்தவர், தாழ்ந்தோர், பெரியோர், சிறியோர் எனும் வேறுபாடின்றி உலகிலுள்ள ஜனநாயகமே ஒருங்கு திரண்டுள்ளதுபோல் புனித ஹஜ்ஜினம் காட்சி பெறுகின்றதன்றே! அன்றியும் தோளோடு தோள்நின்று இருகையேந்தி விண்ணதிர தக்பீர் முழக்கம் செய்யும்போது உள்ளம் பூரிக்கின்றதன்ருே!

களங்கமற்ற தூய உள்ளத்தோடு ஒன்று கூடவேண்டும். அதுமட்டுமன்றி அவர்களின் உள்ளத் தூய்மையின் பிரதிபலிப்பு போல் உடல் தூய்மையும் அதன் சான்ருக தூய வெண்ணிற ஆடையுடன் புனித கஃதுல்லாவை சுற்றி நிற்கும் காட்சியின் மகிமைதான் என்னே!

முஸ்லிம் மக்களாகியநாம் இஸ்லாம் விதித்துள்ள ஐம்பெரும் கடமையுள் இறுதியான ஹஜ்ஜுக் கடமையை நேரிய வழியில் உழைத்த சீரிய முறையில் கடைப்பிடித்து நிறைவேற்ற முயல வேண்டும். அதுவே நபிநாதர் வழியில்சென்ற செல்லும் புகழாகும். இஸ்லாமிய சகோதரத்துவம் என்றும் நிலைபெற நாம் இஸ்லாம் கூறும் மார்க்க விதிகளை அனுசரிப்பது இன்றியமையாப் பண்பாகும்.

வஸ்ஸலாம்

## இன்றைய பலன்

[10-3-68]

ஞாயிற்றுக்கிழமை

[மாசி மீ 27உ]

திதி- ஏகாதசி பின் இரவு 4-30

நட்சத்திரம்- புனர்பூசம் மாலை 5-37 மேல் பூசம்.

ராகுகாலம்- 4-54—6-24.

சுபநேரம் 9-24 — 10-54.

இன்று பிறந்தவர்களுக்கு- புதுமனை கட்டிப் புகுவிழா நடத்துவதற்கு ஏற்ற ஆண்டு. சிலருக்கு அதிர்ஷ்ட இலாபங்களும் கிடைக்க முடியும். கௌரவத்தைப் பாதிக்கக்கூடிய நடவடிக்கைகளில் இறங்காதிருக்கவும். பெண் குலத்தின் ஆதரவும் கிடைக்கும். காதல் களத்தில் மோதலைத் தவிர்த்துக்கொள்ளவும். நீண்ட பிரயாணத்துக்கு இடம் உண்டு. சிலருக்கு இடப்பிரிவும் ஏற்படலாம் பொதுவாக நல்லஆண்டு.

மேஷம்- பிரகாசமான வாழ்வு, பிறர் ஆதரவு

ரிஷபம்- கலையாகப் பணம், கலையான நிகழ்ச்சி

மிதுனம்- புதிய தாக்குதல். புதிர்போடும் வாழ்க்கை

கடகம்- கனல் தெறிக்கும் பார்வை, கபடநாடகம்

சிம்மம்- வார்த்தை ஜாலம், வசீகரப்பார்வை

கன்னி- உன் வீட்டில் பூசல், உபத்திரவ மிகுதி

துலாம்- கற்றதால் பயன், உயர்வுள் நம்பிக்கை

விருச்சிகம்- இதயம் கெஞ்சும், காதல் கொஞ்சும்

தனுசு- வேலைக்களை கொடுப்பர் விழிப்புடன் இரு

மகரம்- வாழ்த்தும். வளமும் வகையுடன் வரும்

கும்பம்- நம்பிக்கெடுதல். நஷ்டமடைதல்

மீனம்-கொள்கை முழக்கம், குறிக்கோளில் வெற்றி

— சோதிடக்கலாநிதி —
திருமலை வேலாயுதபிள்ளை

## மகா சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஞாயிறு இம் மாதம் 13ம் திகதி புதன்கிழமை காலை ஊரிகாவற்றுறை, புளியங் கூடல் மகாமாரியம்மன் கோவிலில் அபிஷேக ஆராதனையுடன் லக்ஷநாமார்ச்சனை ஆரம்பமாகித் தொடர்பாக நடைபெற்று 15 ந்திகதி வெள்ளிக்கிழமை பகல் பூர்த்தியாகி மகா சங்காபிஷேகமும் குளித்தியும் நடைபெற்று அம்பாள் வீதிவலம் வரும்அலங்காரக்காட்சியும் நடைபெறவிருக்கின்றது.

## சுப்ரீம்கோர்ட்டுக்கு பாரம்

வல்வெட்டித்துறை, சனி

துவரூலை என்ற இடத்தைச் சேர்ந்த சீனியன் நடேசு அலைது மாம்பழம், பொன்னன் சின்னத்துரை, கணபதி வேலன் ஆகிய மூவரும் அதே இடத்தைச் சேர்ந்த தேவன், சடையன் ஆகிய இருவரையும் கடந்த வருடம்செப்டெம்பர்மாதம் 23-ம் திகதி துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததாகவும், கந்தையனுக்கு கைக்குண்டு எறிந்து காயப்படுத்தியதாகவும் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. வின்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் இவ்வழக்கை சுப்ரீம் கோர்ட்டிற்கு பாரப்படுத்தியுள்ளார்,

(5ம் கலத் தொடர்ச்சி)

ருந்தார். பொருத்தமான நினைவு!

ஃ ஃ

நூறு பேருக்கு மேல் எந்த விருந்து வைபவமும் இருக்கக்கூடாது. இது சட்டம். கல்யாண வீட்டில் நூறுபேர் வந்து விருந்து சாப்பிட அமாந்துவிட்டால் மாப்பிள்ளையைப் பட்டினி போட்டுவிடாதீர்கள்.

—ஊர்சுற்றி

## நாடும் நடப்பும்

''பேணுந்தன்மை வாய்ந்தவள் பெண்; அழகுக்கு உறைவிடம் ஆதலால் மாது எனப்படும் பெண்மையில் கற்பென்னும் திண்மை அமைந்துள்ளது. இந்தப் பாரத நாட்டிற்குப் பெரும் புகழை விளைவிப்பவர்கள் மூவர்—கற்புடைய மாதர்கள், பக்தர்கள், தத்துவ ஞானிகள். இம்மூவரில் முதலில் நிற்பவர்கள் கற்புடைய பெண்டிர். பதினி, பக்தர்கள், தத்துவ ஞானிகள் என்று கூறுகின்ருர் திருமூலர்.''

''என்ன திமை நாட்டுக்கு வந்தாலும் கற்புக்கு இடர் வரக்கூடாது. பக்தர்களையும் முத்தர்களையும் சித்தர்களையும் பெறுகின்றவர்கள் பத்தினிகள் தானே. கற்புடைய மாதர்கள் இருப்பாராயின் மீண்டும் நாட்டிற்குத் தேவையான பல ஆன்ருேர்களை நமக்குத் தருவார்கள்.''

''அன்பும் இரக்கமும் பெண்ணிடத்திலே அதிகமாகக் குடிகொண்டிருக்கின்றன. அதனுலேயே இறைவன் பிள்ளைப் பேற்றை பெண்ணிடமாகவே அமைத்தான்''

இப்படிப் பெண்ணைப்பற்றியும் பெண்மையைப்பற்றியும் அருமையான கருத்துக்கள் கொண்ட ஒரு சிறு பிரசுரம் எனக்குக் கிடைத்தது. இந்தக் கருத்துக்களை வழங்கியிருப்பவர் யார் என்று நினைக்கிறீர்கள். வேறு யாருமல்ல 'திருப்புகழ் அமிர்தம்' திருமுருக கிருபானந்தவாரியார்தான். அந்தப் பிரசுரத்தில் ஔவையார், மங்கையர்க்கரசியார், ஆண்டாள் அம்மையார், திலகவதியார், திருவெண்காட்டு நங்கையார், மாதவியார், காக்கைபாடினியார், நச்செள்ளையார், நளாயினி, தமயந்தி, சந்திரமதி. அனுசூயை, வாசுகி முதலிய பண்டைக்காலப் பெண்திலகங்களையெல்லாம் வாரியார் நினைவூட்டுகிருர்.

அதுமட்டுமா கணவனுக்கு ஆயுள், புகழ், பெருமை. செல்வம், நோயின்மை முதலிய யாவும் மனைவியினுலேயே வருகின்றன என்று வாரியார் கூறி ''ஏரைப் பிடித்தவன் என் செய்வான், பானை பிடித்தவள் பாக்கியம்'' என்ற பழமொழியையும் சொல்கிருர்.

இப்போது ஏர் பிடிப்பது எத்தனைபேர், பானைபிடிப்பவள் எத்தனை.

பெண்ணைப்பற்றியும் பெண்மையைப்பற்றியும் கிருபானந்தவாரியாரின் இந்த அருமையான கருத்துக்களை ஒரு பெண்ணின் பெண்மையுடன் வாழ்ந்த ஒரு பெண்ணின் மறைவையொட்டி நினைவுப் பிரசுரமாக வெளியிட்டிருந்தனர்.

''பெண் தன்மை பெற்றவர் திருமதி பத்மாவதி அம்மையார். பெண்ணினம் பேணிய பெருமாண்பின் புகழ் ஓங்குக'' என்று வாரியார் கூறியிருப்பது போல மறந்தை அந்தப் பெண்ணும் ஒரு பத்மாவதி அம்மைதான். சில காலம் ஈழநாடு பத்திரிகையின் கொழும்பு நிருபராகப் பணியாற்றிய திரு. பொன் பாலசுந்தரத்தின் மனைவியார் திருமதி பத்மாவதி பாலசுந்தரம் மறைந்து ஒரு மாதமாகிவிட்டது. 31ம் நாள் நடந்த வைபவத்தின்போதுதான் பெண் பற்றிய வாரியாரது கருத்துக்களை நினைவுப் பிரசுரமாக அவரது அனுதாபச் செய்தியுடன் வெளியிட்டி

[4-ம் கலம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசை எவ்விதம் பெற்ருர்



யானை மார்க் சோடா ஸ்தாபனத்தார் நடத்திய 'போத்தல் மூடி' போட்டியில் இரண்டாவது பரிசைப் பெற்ற கொழும்பு உதவி உணவு கட்டுப்பாட்டு காரியாலயத்தில் கடமையாற்றுபவரும் வெல்லம்பிட்டியாவைச் சேர்ந்தவருமான 35 வயதுடைய திரு. ஜே. டபிள்யூ. பெர்னண்டோ தாம் எவ்விதம் இப்போட்டியில் இப்பரிசைப் பெற்ருர் என்பதை பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

'மதுபானத்தைத் தாக்கியதன் விளைவே எனக்கு இந்தப் பரிசு கிடைத்தது என்று கூட நான் கூறுவேன்.'

9 அங்கத்தவர்களைக் கொண்டது எங்கள்குடும்பம் வீட்டுப்பாவிப்புக்கு நாள் ஒன்றுக்கு இரு போத்தல் சோடா தேவைப்படும். இத்தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக நாங்கள் சோடா வாங்குவது வழக்கம். 'யானை மார்க்' சோடா மூடி போட்டியில் பங்குபற்றும் நோக்கம் சுமார் இரு மாதங்களுக்கு முன்னரே ஏற்பட்டது. இந்த ஆர்வத்தினுல் எங்கள் வீட்டில் யானை மார்க் சோடா பாவிப்பு அதிகரித்தது மதுபானத்தில் எனக்கிருந்த மோகத்தை விரட்டுவதற்காக சோடாவை அதிகம் நான் நாடினேன் நான். இதெல்லாம் சேர்ந்து எனது வீட்டில் நாளொன்றுக்கு 4 போத்தல் சோடா பாவிப்புக்குத் தேவைப்படத் தொடங்கியது. எனது மனைவி, இரு பெண்பிள்ளைகள், மைத்துனர் ஆகியோரும் இந்தப் போட்டியில் பங்குபற்றவேண்டுமெனக் கொண்ட ஆர்வமும் இதற்குக்காரணமென்று கூறலாம் சுமார் 400 'யானை மார்க்' சோடா மூடிகளைக்கொண்ட ஒரு தொகையில், I என்ற எழுத்தைக் கண்டுபிடிப்பதில் நான் அதிக கஷ்டப்படவேண்டி நேரிட்டது.

யானை மார்க்[எலிபெண்ட் பிரண்ட்] என்று பொறிக்கப்பட்ட மூடி கண்டுபிடிக்கப்பட்டதே ஒரு பெரிய கதை. சுருக்கமாகச்சொன்னுல் அடுத்த வீட்டுச் சிறுவன் தான் இந்த மூடியை வைத்திருந்தவன். எங்களிருவருக்குமுள்ள ஒப்பந்தத்தில் பரிசில் அரைவாசிப் பணம் அவனுக்குச் சேர வேண்டும். இந்த மூடி ஒரு கிணற்றுள் விழுந்து பின் பகிரத முயற்சி செய்யப்பட்டு வெளியே எடுக்கப்பட்டதென்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெர்னண்டோவுக்கு ரூ. 200 பரிசாக வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# முல்லைத்தீவு ஆஸ்பத்திரிக்கு விரைவில் 'அம்புலன்ஸ்'

முல்லைத்தீவு, சனி

முல்லைத்தீவு அரசினர் வைத்தியசாலை அம்புலன்ஸ் வண்டி சென்ற மூன்று மாதகாலமாகப் பழுதுபட்டு வவுனிப்பாரற்றுக்கிடந்தது. இதுசம்பந்தமாக முல்லைத்தீவு வைத்திய அதிகாரி டாக்டர் கே. இராஜலிங்கம் தலைமைக் காரியாலயத்துடனும் சுகாதார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியுடனும் தொடர்பு கொண்டதன்பயன் இன்னும் சில தினங்களில் ஓர் புதிய அம்புலன்ஸ் வண்டி இங்கு வந்து சேரவிருக்கிறது.

ஃ ஃ

## படித்த மாணவர் குறை

முல்லைத்தீவைச் சேர்ந்த படித்த மாணவர்கள் சிலர் தங்கள் அடையாள அட்டைகளைப் புதுப்பித்து அனுப்பும்படி வவுனியா தொழில் அதிகாரிக்கு அனுப்பி வைத்து மாதங்கள் சில கடந்தும் இதுவரை புதுப்பித்து அனுப்பவில்லையென வவுனியா எம். பி.யிடம் முறையிட்டுள்ளனர்.

ஃ ஃ

## மக்கள் கஷ்டம்

முல்லைத்தீவு கள்ளப்பாடு என்னுமிடத்தில் இருந்து வந்த தபால்பெட்டி பழுதடைந்து பல மாதங்களாகியும் இதுவரையும் ஒரு புதிய பெட்டி இங்கு வைக்கப்படாததன் காரணமாக இங்குள்ளவர்கள் ஒரு மைல் தூரம் வரை நடந்து சென்று தங்கள் தபால்களைப் போடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

ஃ ஃ

## நிலை மாறவில்லை

இப்பகுதியில் நூற்றுக்குத் தொண்ணூறு வீதம் இம்முறை நெல் விளைந்தும் இதுவரை அரிசியின் விலையில் ஒருவித மாற்றமும் இல்லை. ஒரு கொத்து அரிசி 1 ரூபா 50 சதம் விற்கிருர்கள். இதனுல் ஏழைகளும் அன்ருடம்கூலித்தொழில் செய்யும் தொழிலாளர்களும் கஷ்டத்துக்குள்ளாகியிருக்கின்றனர்.

வவுனியாவில்

# ஒரு வாரத்தில் 2,500 பேர் மலேரியாவால் பாதிப்பு

வவுனியா, சனி

வவுனியாவில் மலேரியா வேகமாகப் பரவிவருவதாகத்தெரியவருகிறது.

வவுனியாவிலுள்ள மூன்றுமுறிப்பு எனும் கிராமத்தில் 2,500க்கு மேற்பட்டவர்கள்ஒருவாரத்துக்குள்பாதிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு சுகாதாரப் பகுதியினர் சிகிச்சையளிப்பதில் தீவிர கவனமெடுத்துவருகின்றனர்.

வவுனியாவில் மலேரியா பரவுவதுடன் உஷ்ணம் சம்பந்தமான நோய்களும் இப்போது பரவி மக்களை அச்சப்படுத்திவருகிறது.

## பொருளாதார ...

[1-ம்பக்கத் தொடர்ச்சி]

மிக மோசமாகவும் நெருக்கடியாகவும் இருந்த பொருளாதார நிலை இப்போது நெருக்கடியான கட்டத்தை நீங்கி முன்னேற்றம் அடைந்து வருகிறது. பொருளாதார நெருக்கடி என்ற கட்டம் இப்போது இல்லை. பொருளாதார முன்னேற்றம் இப்போது துரிதமாக ஏற்பட்டு வருகிறது. இலங்கையிலுள்ள மக்கள் பொருளாதார முன்னேற்றத்துக்காக உழைக்கின்றனர் பொருளாதார முன்னணியில் முன்னேற்றம் கடைந்துள்ளதுடன் தொழில் துறையில் அமைதியும் உற்பத்தி அதிகரிப்பும் ஏற்பட்டுள்ளது என்றும் உலக வங்கி அறிக்கை கூறுகிறது.

இலங்கையின் பொருளாதார முன்னேற்றம் பற்றி உலக வங்கி பாராட்டுத் தெரிவித்திருப்பதால் இலங்கைக்கு உதவி கிடைப்பது பெரும்பாலும் நிச்சயமென்று கருதப்படுகிறது.

## புதிய முறையில்...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

இரு வினுத்தாள்களைக் கொண்ட ஆங்கில பாடத்தில், முதல் வினுத்தாளுக்கு 70 புள்ளிகளும், இரண்டாம் வினுத்தாளுக்கு 30 புள்ளிகளும் வழங்கப்படும். மொழிபெயர்ப்பு இருக்காது இதற்கான பாடவிதானமும், மாதிரி வினுத்தாள்களும் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

## சிதம்பரா வென்றது

இமையாணன், சனி

வடமராட்சி ஆசிரியர் சங்கத்தினர் நடத்திய கைப்பந்தாட்டப் போட்டியில், வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரியுடன் விளையாடி மூன்று ஆட்டங்களிலும் வெற்றி யீட்டியுள்ளது.

சிதம்பராக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில்நடைபெற்ற இப் போட்டியில் வெற்றியீட்டிய சிதம்பராக் கல்லூரிக்கு, வல்வெட்டித்துறை பட்டின சபைத் தலைவர் இரத்தினவடிவேல் வடமராட்சி ஆசிரியர் சங்கத்தினுல் வழங்கப்பட்ட வெற்றிக் கேடயத்தை வழங்கினுர்.

இப்போட்டியில் இரு கல்லூரி வீரர்களும் திறமையாக விளையாடினுர்கள்.

## என்கணவர்......

(1-ம் பக்க தொடர்ச்சி)

புஷ்பம் செளந்தரநாயகம் சொன்னுர்

இன்று தங்களிடம் ஒரு சதம்கூட இல்லையென்றும் அபராதத் தொகையை எப்படித்தான் செலுத்துவாரோ என்று தமக்குத் தெரியவில்லையென்று கூறிய திருமதி புஷ்பம் தமது கணவரின் உடல்நிலை மோசமென்றும் உணவிலும்வைத்தியத்திலும் கவனம்செலுத்தாவிட்டால் நீண்டகாலம் உயிர்வாழ்வது சந்தேகம் என்றும் அவர் கவலையுடன் சொன்னுர்.

## பஸ் விபத்தில் 9 பேர் பலி

விஜயவாடா, மார்ச், 9

விஜயவாடாவில், பஸ்ஒன்று ரயிலுடன் மோதியதன் விளைவாக பஸ்ஸிலிருந்த 9 பிரயாணிகள் உயிரிழந்தனர்.

## கராஜில் கிடந்தசடலம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் வெலிங்டன் சந்தியிலுள்ள கராஜ் ஒன்றில் இறந்த நிலையில் கிடந்த வயோதிபரின் சடலம் மரண விசாரணையின் பின்னர் இறந்தவர்களின் உறவினர்களிடம் வழங்கப்பட்டது

கடந்த 7-ம்திகதி இறந்த நிலையில் கிடந்தவர் யாழ்ப்பாணம் பலாலி வீதியைச்சேர்ந்த சண்முகராசா சின்னத்துரை என்ற 63 வயது வயோதிபரென அடையாளம் காணப்பட்டது. மரணவிசாரணை அதிகாரி திரு.என் இராசநாயகம் மரணவிசாரணை நடத்திய பின்னர் இயற்கை மரணமெனத்தீர்ப்பளித்து இறந்தவரின் உறவினர்களிடம் சடலத்தைக் கொடுத்தார்.

(கா. நி)

## இருவருடமாக இந்தநிலை

முல்லைத்தீவு மிருக வைத்தியர் 1966-ல்இறந்தும் இதுவரை ஒருவரும் நியமிக்கப்படவில்லை. தற்போது மிருக வைத்தியசாலையில் கடமை செய்யும் இரு உதவியாளர்கள் இரு பிரிவுக் காரியாதிகாரி பிரிவுகளைக் கவனிக்கின்றனர். ஆனுல் கடும் நோய்களினுல் வருந்தும் கால்நடைகளுக்கு உடனுக்குடன் சிகிச்சை செய்யமுடியாத நிலைஏற்பட்டுள்ளது. இதுபற்றிவவுனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் உணவு விவசாய அமைச்சருடன் தொடர்பு கொண்டுள்ளதாக அறியப்படுகிறது.

# 6-ம் வகுப்பு பரீட்சை: இனி அரசாங்கம் நடத்தும்

உடுப்பிட்டி, சனி

இலங்கையில் முதல் தடவையாக இவ்வருடம் கீழ்வகுப்புகளுக்கும் அரசாங்க பரீட்சை நடாத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. ஆரும் வகுப்புக்கு அரசாங்கம் நடாத்தும் தவணைப் பரீட்சை இம்மாதம் 25-ம், 26-ம் திகதிகளில் நடைபெறும்.

மாகாண ரீதியான இப்பரீட்சைக்கு வினுத்தாள்கள் தயாரிக்கப்பட்டுப் பரீட்சை நடைபெறும். 6-ம் வகுப்பின் ஒவ்வொரு தவணைப் பரீட்சையும் இனிமேல் இவ்வாருகவே நடக்குமென்றும். இப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவ, மாணவிகள் ஆங்கிலம், தமிழ் அல்லது சிங்களம், பொது விஞ்ஞானம், பூமிசாஸ்திரம், தாயகணிதம், சரித்திரம், தையல் ஆகியனவும் வேருெரு பாடமும் எடுக்க வேண்டுமெனவும் தெரிகிறது. இப்பரீட்சைக்கான வினுப்பத்திரங்கள் கல்விப்பகுதியினுல் சகல பாடசாலைகட்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சிரேஷ்ட பாடசாலைகள் பரீட்சை நிலையங்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. வழமையாக அரசாங்கம் நடாத்தி வரும் ஜி. ஸி. ஈ. பரீட்சையைப் போன்றே இப்பரீட்சையும் நடைபெறும். ஆரும் வகுப்பிலுள்ள அத்தனை மாணவர்களும் ஆரும் வகுப்புப் பரீட்சைக்குக் கட்டாயம் தோற்றவேண்டும் எனவும் விருப்பத்திரம் ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒரே வினுவைக் கொண்டதாக அமையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தரம் உயர்வு

புத்தளம், சனி

கடந்த ஆறுவருடமாகப் புத்தளம் ஸகிரா பாலர் பாடசாலையாய்இயங்கிவந்த பாடசாலை ஸகிரா கனிஷ்ட பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

கனிஷ்ட பாடசாலையாய்த் தரம் உயர்ந்தாலும் இப்பொழுது பாலர்மேல்வகுப்பு [5 பிரிவு] இரண்டாம் வகுப்பு [4 பிரிவு] மூன்ரும் வகுப்பு[3 பிரிவு]மாத்திரமே [illegible] ஆசிரியர் [illegible] குறைவே இதற்குக்காரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபால்தந்தி விநியோகத்தை சீராக்க 5 புதிய தபாற்கந்தோர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நாடு முழுவதும் தபால் தந்தி விநியோகத்தை சீரான முறையில் நடாத்த ஐந்து புதிய தபாற் கந்தோரிகளைக் கட்டும் வேலைகளை தபால் தந்திப் போக்குவரத்து அமைச்சு மேற் கொள்ள விருக்கிறது.

இப் புதிய கந்தோர்கள் காலி, திசமாருமை, மாங்குளம், ஹோமகம, கடவத்தை ஆகிய இடங்களில் அமைக்கப்படவுள்ளன. இதற்கான அனுமதியை தபால் தந்தி அமைச்சர் மேஜர் மொண்டேகு ஜெயவிக்கிரம வழங்கியுள்ளார்.

இது சம்பந்தமான பூர்வாங்க நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப் பட்டுள்ளன. இவ்வருட இறுதியில் இந்த கட்டட வேலைகள் பூர்த்தியடையுமென எதிர்பார்க்கப் படுகின்றது. ஒவ்வொரு தபாற் கந்தோருக்கும், அதன் நிர்மாண வேலைக்கான அளவைப் பொறுத்து 2 லட்சம் ரூபாவிலிருந்து 4 லட்சம் ரூபா வரை செலவாகுமென எதிர் பார்க்கப்படுகின்றது.

இக் கட்டட வேலைகளுக்காக மொத்தம் 18 லட்சம் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட 45 தபாற் கந்தோர்களின் கட்டட வேலைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இவற்றில் ஒன்றான குளியாப்பிட்டி தபாற் கந்தோர் அண்மையில் திறந்து வைக்கப் பட்டது குறிப்பிடத்தக்கது.

(கா. நி)

# பெற்றோல் ஆராய்ச்சி புத்தளத்திலும் நடைபெறும்

காங்கேசன்துறை, சனி

இலங்கையின் வட பகுதியில் பெட்ரோல் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வரும் பிரெஞ்சு நிபுணர்கள் இலங்கையில் இருப்பதற்கு மூன்றாவது தடவையாக இலங்கை அரசாங்கத்திடம் அவகாசம் கேட்டுள்ளனர்.

வடபகுதியில் கடந்த பல மாதங்களாக பெட்ரோல் எண்ணெய்வள ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்த பிரெஞ்சு நிபுணர்கள் செம்பியன் பற்றை அடுத்த மாமுனைப் பகுதியிலும் குடாரப்பு, புங்குடுதீவு ஆகிய இடங்களிலும் பெற்றோல் 12,000 அடி ஆழத்தில் ஊறுவகாக கண்டுபிடித்துள்ளனர்.

அண்மைக் காலத்தில் நடத்திய ஆராய்ச்சியில் மன்னாரை அடுத்த 'கிராஞ்சி' என்னுமிடத்திலும் நெடுந்தீவிலும் பெற்றோல் ஊறவாமென பிரெஞ்சு நிபுணர்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாகவும் இவ்விரு இடங்களிலும் இரண்டாவது தடவையாக ஆராய்ச்சி நடைபெறவிருப்பதாகவும் தெரிய வருகிறது.

இன்னும் இரண்டொரு தினங்களில் பண்ணையை அடுத்த இடங்களில் பெட்ரோல் ஆராய்ச்சி நடைபெறவிருக்கிறது.

பிரெஞ்சு நாட்டு நான்கு நிபுணர்களான பிறயேயன், மொறிஸ், ஒப்சேவர் லராயர், ஓடான் ஆகியோரின் உதவியுடன் இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனமும், நிலவியல் ஆராய்ச்சி நிலையமும், இலங்கை அரச கடற்படையினரும் ஒன்று சேர்ந்து நடாத்தி வரும்பெற்றோல் எண்ணெய்வள ஆராய்ச்சிகள் வெற்றி பெற்று வருவதுடன் பிரெஞ்சு நிபுணர்கள் இலங்கையில் தங்குவதற்கு மூன்றாவது தடவையாகவும் அவகாசம் கேட்டுள்ளனர்.

இதுவரை பிரெஞ்சு நிபுணர்கள் வடபகுதியில் தொண்டமானாறு, வல்லை, தாளையடி, செம்பியன்பற்று, துன்னாலை, நெடுங்கேணி, கரணவாய், வளலாய், அச்சுவேலி, மணற்காடு, மாதகல், குடாரப்பு, உடுப்பிட்டி, புங்குடுதீவு பூநகரி, காங்கேசன்துறை, நெடுந்தீவு ஆகிய இடங்களில் ஆராய்ச்சி நடாத்தியுள்ளனர்.

முதல் தடவையாக இன்னும் இரண்டு வாரத்தில் பிரெஞ்சு நிபுணர்கள் புத்தளத்துக்கு பெற்றோல்ஆராய்ச்சிக்கு செல்லவிருக்கின்றனர். தற்பொழுது பிரெஞ்சு நிபுணர்கள் கிரிமலையில் முகாமிட்டுள்ளனர்.

## ஆவன செய்யுங்கள்

ஊர்காவற்றுறை, சனி

சரவணை உபதபாற் கந்தோர் ஆரம்பிக்கப்பட்டு 18 வருடங்களாகியும் தொலைபேசி வசதி அங்கு இல்லாததால் அப்பகுதி மக்கள் மிகவும் கஷ்டம் அனுபவிக்கின்றனர் எனவும், சரவணைக்கிராமத்தில் பலகாலமாக மருத்துவமாது இல்லாமல் இருந்துவருவதினால் இப்பகுதி கர்ப்பிணிகள் மிகவும் கஷ்டம் அனுபவிப்பதாகவும் இதற்கான நடவடிக்கைகளை உடனே எடுத்து ஆவன செய்யுமாறு கோரும் மகஜர்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகட்கு, சரவணைக்கிராம முன்னேற்றச் சங்கக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டபின் அனுப்பி வைத்துள்ளனர்.

## குருவிளையாட்டுக்கழகம் வென்றது

காங்கேசன்துறை, சனி

விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடைபெற்றுவரும் கிரிக்கெட் போட்டியில் குரு விளையாட்டுக் கழகம் கடந்த வார இறுதியில் கட்டுவன் பாலர்ஞானோதயாவிளையாட்டுக் கழகத்திற்கெதிரான போட்டியில் ஓர் ஆட்டத்தாலும் 53 ஓட்டகளாலும் வெற்றியீட்டியது.

வர்த்தளைவிளான் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில்முதலில் துடுப் பெடுத்தாடிய பாலர் ஞானோதயா விளையாட்டுகழகம் தமது முதலாட்டத்தில் 60 ரன்களை எடுத்தனர்.

குரு விளையாட்டுக் கழகம் தமது முதலாவது ஆட்டத்தில் 134 ஓட்டங்களைப் பெற்றனர். ஞானோதயாக் கோஷ்டியினர் இரண்டாவது ஆட்டத்தில் 21 ஓட்டங்களை மட்டுமே பெற்றனர்.

## உப தலைவர்தெரிவு

உடுவில், சனி

மானிப்பாய் பட்டினசபையின் உப தலைவர் தெரிவு நேற்று நடைபெற்றது. மானிப்பாய் பட்டின சபை மண்டபத்தில் நடைபெற்ற இத் தெரிவின் போது பட்டினசபையின் உபதலைவராக திரு. எஸ். ஏச். இராசசூரியர் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

## யு. என். பி. எம்.பி.க்கள் மகஜர்

கொழும்பு, சனி

உப தேர்தல்களில் குறிப்பாக கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் சமஷ்டிக் கட்சியின் கோரிக்கைக்கு விட்டுக்கொடுக்கக்கூடாதென்றும் கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம்களும் சிங்கள மக்களும் சமஷ்டிக் கட்சியைவிட யு. என். பி.யை ஆதரிக்கிறார்களென்றும் கல்முனை உபதேர்தலில் யு. என். பி. ஓர் அபேட்சகரை நிறுத்தியிருந்தால் சுலபமாக வெற்றியீட்டியிருக்கலாமென்றும் யு என். பி. எம். பி.க்கள் சிலர் பிரதமருக்கு சமர்ப்பித்துள்ள மகஜர் ஒன்றில் தெரிவித்திருக்கிறார்கள்.

உபதேர்தலில் அபேட்சகர்களை நிறுத்துவது பற்றி ஆளும் கட்சிக் குழுவையும் கலந்தாலோசனை செய்யுமாறு அவர்கள் கேட்டுள்ளனராம்.

## தீர்மானங்கள்

சங்கானை, சனி

பண்டத்தரிப்பு கோவில் பற்று பஸ் பிரயாணிகள் சங்க மாதாந்தக்கூட்டத்தில் சுன்னாகம் புகையிரத நிலையத்திற்கு செல்லும் பிரயாணிகள் நன்மையைக் கருதி காலையும், நண்பகலும் பண்டத்தரிப்பூடாக புகையிரத சேவையுடன் தொடர்புடைய பஸ்சேவை ஒன்றை ஆரம்பிக்கும்படி கோருவதெனவும், முக்கிய பஸ்தரிப்பு நிலையங்களில் அவ்வப் பகுதி பஸ்சேவை பற்றிய நேர அட்டவணை தொங்கவிடப்பட வேண்டுமெனக் கோருவதெனவும்தற்போது நிறுத்தப்பட்டுள்ள 789 இலக்க பஸ் சேவையைத் திரும்பவும் சேவைக்கமர்த்தக்கோருவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இத்தீர்மானங்கள் வலி. மேற்கு காரியாதிகாரி திரு. என். மாணிக்க நடராசா, வடமாகாண உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை, யாழ் பிராந்திய இ. போ. ச. முகாமையாளர் முதலியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## மூவரை பொலிஸ் தேடுகிறது

யாழ்ப்பாணம், சனி

கடைக்கு தேநீர்வாங்கச் சென்ற சிறுமி ஒருவர்மீது மூவர்பலாத்காரம் பிரயோகித்தார்களாம். இது சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் மூவரை பொலிஸார் தேடுகின்றனர்.

கொட்டடியில்நடைபெற்றதாகக் கூறப்படும் இச் சம்பவம் சம்பந்தமாக யாழ்ப்பாணம் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் எவரும் இன்னும் கைதுசெய்யப்படவில்லை புலன் விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது. [கா. நி]

## சொக்கனுக்கு தேநீர் விருந்து

யாழ்ப்பாணம், சனி

''தெய்வப் பாவை'' நாடகாசிரியர் திரு. சொக்கனுக்கு அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தாரால்தேநீர் விருந்துபசாரமும், பாராட்டும் வழங்கப்பட்டது. நல்லூர் மங்கயற்கரசி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்ற இவ் வைபவத்தில் நாடக நடிகர்கள் சகலரும் கலந்து கொண்டனர். சங்கீத பூஷணம் திரு அ. நமசிவாயத்தின் புல்லாங்குழல் இசையும் இங்கு நடைபெற்றது.

(கா. நி)

யாழ்ப்பாணத்தில்

# குடும்பக்கட்டுப் பாட்டு கண்காட்சியும் கருத்தரங்கும்

## பாகிஸ்தான், இந்திய பிரதிநிதிகள் கலந்து கொள்வர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வடபகுதியில் குடும்பக் கட்டுப்பாட்டை அமுல்செய்வதற்கான கண்காட்சி ஒன்றும், கருத்தரங்கும் இம்மாதம் 21, 22ந் தேதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கின்றன. இதற்கான விரிவான ஒழுங்குகளை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகராவின் தலைமையிலான குழுவொன்று கவனித்துவருகிறது.

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியில் இக்கருத்தரங்கும், கண்காட்சியும் நடைபெறும். 21ந் தேதி மாலை 3 மணிக்குக் கண்காட்சி ஆரம்பமாகும். அன்றிரவு நடைபெறும் கருத்தரங்கில் நேபாளக் குடும்பக்கட்டுப்பாட்டுச் சங்கத்தைச் சேர்ந்த டாக்டர் ஆர். பி. லோஹிமும், பாகிஸ்தான் குடும்பக்கட்டுப்பாட்டுச் சங்கத்தைச் சேர்ந்த டாக்டர் திருமதி சாரின் பலல்பாய் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்கள்.

சர்வதேச திட்டமிடப்பட்ட குடும்பக் கட்டுப்பாட்டுச் சம்மேளனத்தைச் சேர்ந்த லேடி ருமாருவ், அகில இந்தியக் குடும்பக் கட்டுப்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த திருமதி ஆவாபாய் வாடியா, யாழ்ப்பாண மாவட்ட சுகாதார சேவை அத்தியட்சகர் உட்படப் பல டாக்டர்கள் இக்கருத்தரங்கில் கலந்துகொள்ளவிருக்கிறார்கள்.

குடும்பக் கட்டுப்பாடு பற்றிய திரைப்படக் காட்சிகளும், கண்காட்சிகளும் இரு தினங்களுக்குத் தொடர்ந்து நடைபெறவிருக்கிறது. கா. நி.

பொலநறுவையில்

# இம்மாத மத்தியில் கட்டிப்பால் உற்பத்தி

யாழ்ப்பாணம், ஞாயிறு

பொலனறுவையில் நிறுவப்பட்டுள்ள கட்டிப்பால் தொழிற்சாலை இம்மாதமத்தியில் கட்டிப்பால் வர்த்தக உற்பத்தியை ஆரம்பிக்குமென எதிர் பார்க்கப்படுகின்றது.

இத்தொழிற்சாலையில் கட்டிப்பால் உற்பத்தி பூரணமாக மேற்கொள்ளப் பட்டதும் இத்தொழிற்சாலையில் வருடமொன்றில் 2 கோடி 50 லட்சம் தகரங்களிலடைத்த கட்டிப்பால் தயாரிக்கப்படுமென்றும் இதுவருடாவருடம் 1 கோடி 8 லட்சம் ரூபா வெளி நாட்டுச் செலாவணியை மிச்சப்படுத்துமெனறும்இலங்கைக்குத் தேவையான கட்டிப்பாலை இங்கேயே உற்பத்திசெய்யலாமெனவும் மதிப்பிடப் பட்டுள்ளது.

இத்தொழிற்சாலை சுமார் 70 லட்சம் ரூபாவில் பொலனறுவையில் தமன் கடுவை என்னுமிடத்தில் அமைக்கப் பட்டுள்ளது. இங்கு உயர் தர கட்டிப்பாலை தயாரிக்கவென இலங்கையால் சபை இரண்டு உடன்படிக்கைகளை வெளி நாட்டு நிறுவனங்களுடன் செய்துள்ளது.

கட்டிப்பால் தயாரிக்க தேவையான பாலில் அரைவாசியை பெறவென இங்கு ஒரு கால்நடைப்பண்ணையையும் விவசாயப்பகுதி ஆரம்பித்துள்ளது. இத்திட்டத்தின்படி பாகிஸ்தான், இந்தியா ஆகிய இடங்களிலிருந்து பால் கறக்கும் எருமைகள் இங்கு இறக்குமதிசெய்யப்படும். நான்குவருட ஒப்பந்த எல்லையுள் இவைகள் இங்கு கொண்டுவரப்படும்.

(கா. நி)

## கடத்தல் சேலை வைத்திருந்தவருக்கு அபராதம்

குரும்பசிட்டி, சனி

யாழ்ப்பாணம் சுங்க இலாகா சுந்தோர் தடுப்பு அதிகாரி திரு. ஆர். செல்வரத்தினம் தலைமையில் சென்று திடீர் பரிசோதனை நடாத்திய சுங்க அதிகாரிகள் கோஷ்டியினர் யாழ்ப்பாணத்திலுள்ள வீடு ஒன்றிலிருந்து சுமார் 10 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த இந்தியாவிலிருந்து கடத்தி வந்ததாக கருதப்படும் சேலைகளைக் கைப்பற்றினர்.

கைப்பற்றப்பட்ட சேலைகளில் ''பெனாரிஸ்'' வகை உட்பட வேறுபல விலையுயர்ந்த சாறிகளும் காணப்பட்டனவாம் இதுசம்பந்தமாக வீட்டின் சொந்தக்காரர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு மாவட்ட உதவி சுங்க இலாகா கலெக்டர் திரு. கந்தசாமி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டார். கைப்பற்றப்பட்ட சேலைகள் பறிமுதலாகின.

## எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், ஞாயிறு

மாநகரசபையின் உத்தரவின்றி ஒரு கட்டிடம் கட்டியதாக மாநகரசபை ஆணையாளர்களால் தொடரப்பட்ட வழக்கில் எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

குருநகரைச் சேர்ந்த மூத்தையா மார்க்கண்டு என்பவர் மாநகரசபையின் உத்தரவின்றி கட்டிடம் கட்டியதாக குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு நேற்று யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. ஜாமின் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

எதிரி சாரிபில் புறக்டர் ஏ. அன்ரனியும், மாநகர சபை ஆணையாளர் சாரிபில் புறக்டர் வி. நடராசாவும் ஆஜரானார்கள்.

சுகாதார பரிசோதகர் திரு. எஸ். வீரசிங்கம் சாட்சியமளித்ததைத் தொடர்ந்து மாஜிஸ்டிரேட் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

## இளைஞர் கழகம் வெற்றி

யாழ்ப்பாணம், சனி

அரியாலை இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்திற்கும், திருமகள் விளையாட்டுக் கழகத்திற்கும் மிடையில் நடைபெற்ற சினேக பூர்வமான கிரிக்கெட் போட்டியில் இந்து இளைஞர் கழகம் ஓர் இனிங்சாலும் 65 ஓட்டங்களாலும் வெற்றியீட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டுக்கோட்டை

# பாடசாலைகள் உடற்பயிற்சி போட்டி முடிவுகள்

சுழிபுரம், சனி

வட்டுக்கோட்டைத் தொகுதி வட்டாரப் பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டி சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. உடற்பயிற்சி வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை வட்டார வித்தியாதரிசி திரு. எஸ். சபாபதி ஏற்றுக்கொண்டார். போட்டியில் வெற்றி பெற்ற பாடசாலைகள் பின்வருமாறு:

ஆ பிரிவு: 19 வயது பெண்கள்- பண்டத்தரிப்பு மகளிர்கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி.

16 வயது பெண்கள்- பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி

13 வயது பெண்கள்- பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி.

19 வயது ஆண்கள்- பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி, வட்டுகோட்டை இந்துக்கல்லூரி.

16 வயது ஆண்கள்- வட்டுக்கோட்டை இந்துககல்லூரி, காரைநகர் யாழ்டன் கல்லூரி.

13 வயது ஆண்கள்- பண்டத்தரிப்பு இந்துக்கலூரி.

ஆ பிரிவு: 13 வயது ஆண்கள்-பண்டத்தரிப்பு வசிந்தா பாடசாலை, வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் வித்தியாசாலை, சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலை.

16 வயது ஆண்கள்: அராலி வள்ளியம்மை வித்தியாசாலை.

16 வயது பெண்கள்: சில்லாலை றோமன் கத்தோலிக்க பாடசாலை.

19 வயது பெண்கள் அராலி முருகமூர்த்தி வித்தியாசாலை, பண்ணாகம் மெய்கண்டான் உ. பாடசாலை,

## நல்லூர்வென்றது

புன்னாலைக்கட்டுவன், சனி

நல்லூர் விளையாட்டுக் கழகத்திற்கும் உரும்பராய்விளையாட்டுக் கழகத்துக்கு மிடையே நடைபெற்றகிரிக்கெட் போட்டியில் நல்லூர் விளையாட்டுக் கழகம் 5 விக்கட்டுகளாலும் 7 ஓட்டங்களாலும் வெற்றியீட்டியது முதல் ஆட்டத்தில் நல்லூர் கோஷ்டி 55 ஓட்டங்களும், உரும்பராய்க் கோஷ்டி 35, ஓட்டங்களும் பெற்றன இரண்டாம் ஆட்டத்தில் முறையே 63-ம். 43-ம் பெற்றன.

## வலைப்பந்தாட்ட கழக உறுப்பினர்

திருக்கோணமலை, சனி

திருக்கோணமலை வலைப்பந்தாட்டக் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் இங்கு நடைபெற்றபோது கீழ்க்காணும் உத்தியோகஸ்தர்கள் 1968, 1969-ம் ஆண்டுக்கெனத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்.

போஷகர்கள்: திருமதி ஆர். பாமர், திருமதி எம் அருமைநாயகம், செல்வி ஆர். விஸ்வலிங்கம், தலைவர்: திருமதி எம். பாலசிங்கம், செயலாளர்: செல்வி எஸ். வடிவேல், தனாதிகாரி: திருமதி டி. யோகரத்தினம், செயற்குழு அங்கத்தவர்கள்: திருமதி செ. வின்ஸ்லோ, திருமதி ஆர். சபாரத்தினம், திருமதி எஸ். குமாரதாசன், திருமதி ஏ. இராஜரத்தினம், செல்வி சதி. ஆசீஸ், திரு. எஸ். இரத்தினசபாபதி, திரு. கே. நடராசா.

# உடுவில் வட்டார பாடசாலைகள் உடற்பயிற்சிப் போட்டி முடிவுகள்

உடுவில், சனி

உடுவில் வட்டாரத்தை சேர்ந்த பல வேறு பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டிகள் இவ்வாற முடிவில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

வட்டார வித்தியாதரிசி திரு. இராசா இப் போட்டிகளுக்குத் தலைமை வகித்து நடத்தினார்.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் அதிபர் திரு. வி சிவசுப்பிரமணியம் சான்றிதழ்கள் வழங்கினார்.

உடற்பயிற்சிப் போட்டிகளில் வெற்றியீட்டிய பாடசாலைகளின் விபரம் பின்வருமாறு:-

19 வயதுக்கு உட்பட்டவர்கள்: 'ஏ' பிரிவு பெண்கள்: உடுவில் இராமநாதன் கல்லூரி, சண்டிருப்பாய் இந்துக் கல்லூரி, ஏழாலை மகா வித்தியாலயம்.

'ஏ' பிரிவு ஆண்கள்: உடுவில் மான் பாடசாலை, மானிப்பாய் இந்துக் கல்லூரி, சண்டிருப்பாய் இந்துக் கல்லூரி.

16 வயதுக்கு உட்பட்டவர்கள்:

''ஏ'' பிரிவு பெண்கள்- சுன்னாகம்ஸ்கந்தவரோதயா கல்லூரி, உடுவில்மான்பாடசாலை.

''ஏ'' பிரிவு ஆண்கள்:- சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி. ஏழாலைமகா வித்தியாலயம்.

13 வயதுக்கு உட்பட்டவர்கள்:-

''ஏ'' பிரிவு பெண்கள்:- உடுவில் இராமநாதன் கல்லூரி. சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி. நவாலி மகாவித்தியாலயம்.

19 வயதுக்கு உட்பட்டவர்கள்:-

''பி'' பிரிவு பெண்கள்:- இணுவில் சைவமகாஜனவித்தியாசாலை ஆண்கள் இணுவில் சைவமகாஜன வித்தியசாலை.

16 வயதுக்கு உட்பட்டவர்கள்:-

பி' பிரிவு பெண்கள்:-மானிப்பாய் செனட் ஜேம்ஸ் கல்லூரி, இணுவில் சைவமகாஜன வித்தியாசாலை.

ஆண்கள்:- இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலை, ஆனைக்கோட்டை தமிழ் கலவன் பாடசாலை.

13 வயதுக்கு உட்பட்டவர்கள்:-

'பி' பிரிவு பெண்கள்: மானிப்பாய் செனஜேம்ஸ் பாடசாலை, இணுவில சைவமகாஜன வித்தியாசாலை, ஆனைக்கோட்டை தமிழ் கலவன் பாடசாலை.

ஆண்கள்: ஆனைக்கோட்டை தமிழ் கலவன் பாடசாலை, இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலை.

## வருடாந்த பரிசளிப்பு

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணக்கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு வைபவம் இம்மாதம் 16-ம் திகதி கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

ஜனப்பிரதிநிதிகள் சபா சபாநாயகர் திரு. ஷேர்லி எஸ். வி. கொரியா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். திருமதி வி. ... பரிசில்களை வழங்குவார்.

## பழையமாணவர் சங்கக் கூட்டம்

அளவெட்டி, சனி

அளவெட்டி அருணோதயாக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக்கிளை அங்குரார்ப்பணக்கூட்டம் பம்பலப்பிட்டி இந்து சிரேஷ்ட பாடசாலைமண்டபத்தில்நடைபெற்றது.

திரு. ஈ. இராசையா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பாடசாலையின் அபிவிருத்திக்கு பழைய மாணவர்களும், பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களும் அதிக உதவி செய்ய வேண்டியது அவசியம்எனக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

கொழும்புக்கிளையின் உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்: திரு. ஈ இராசையா, உபபோசகர்: திரு. எஸ். சிவசுப்பிரமணியம், தலைவர்: திரு. கி. இரங்கநாதன் (கியூ சி.), உபதலைவர்கள்: திருவாளர்கள்- ஆ. நிலவேசு, ஈ. கந்தையா, ரி மயில்வாகனம், இணைக்காரியதரிசிகள்: திருவாளர்கள்- பி தம்பிப்பிள்ளை, எஸ். சிவலிங்கம், உபகாரியதரிசி: திரு எஸ். நாகராசா, தனாதிகாரி: திரு. எஸ். சிந்தரேசன்- நிர்வாகசபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## தாச்சி சுற்றுப்போட்டி

சங்கானை, சனி

வலி மேற்கு உடற்பயிற்சி இயக்குநர் திரு. ரி நடராசா தாச்சி விளையாட்டுச் சுற்றுப்போட்டி ஒன்றை வலி. மேற்கிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடாத்துவதற்கு ஏற்பாடு செய்துவருகின்றார்.

இதில் அநேக கழகங்கள் பங்கு பற்றிக்கொள்ளுமெனவும் இம்மாதம் போட்டி ஆரம்பிக்கப்பட இருப்பதாகவும் தெரியவருகிறது.

## விளையாட்டுக் கழக உத்தியோகஸ்தர்

சங்கானை, சனி

பண்டைத்தரிப்பு சங்கிலியன் விளையாட்டுக்கழக வருடாந்தக் கூட்டம் திரு. சி. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. சி. தனபாலசிங்கம், உப தலைவர் தி. வ. ஆரியரத்தினம், காரியதரிசி வே. தனபாலசிங்கம், உபகாரியதரிசி ஏ. வில்லியம், பொருளாளர் ஏ. ஜெசிங்கம். விளையாட்டு அதிபர் எம். நந்தகுமார், உதவி விளையாட்டு அதிபர் நீ. மேரி யோசப்.

பிரதேச அங்கத்தவர்கள்; பண்டத்தரிப்பு-பற்றிக்குணநாயகம், மாதகல்- ந. பரமகுலசிங்கம், வடலியடைப்பு எஸ். மகாதேவன், மாரீசன் கூடல்- க. கைதாம்பிள்ளை சில்லாலை- ஏ. செல்வரத்தினம், இளவாலை-ஏ. யோசப் கணக்குப்பரிசோதகர்கள் க. பத்மநாதன், ஏ. ஜேஎமானுவல்.

## விஞ்ஞான யுகம்

குரும்பசிட்டி, சனி

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி விஞ்ஞான மாணவர் கழகத்தின் விசேஷ பொதுக் கூட்டமொன்றில் கலந்துகொண்ட அமெரிக்க சமாதான தொண்டர் படையைச் சேர்ந்த திரு. ரெனிசன் ''தற்போதைய விஞ்ஞான யுகம்'' என்ற பொருள் பற்றி விரிவுரை நிகழ்த்தினார்.

# கண்டி கோஷ்டியை யாழ். சென். ஜோன்ஸ் வென்றது

யாழ்ப்பாணம், ஞாயிறு

கண்டி சென். சில்வஸ்டர் கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையே தொடர்ந்து இரு நாட்கள் சென். ஜோன்ஸ் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் கடைசி நேரத்தில் கடுமையாக ஆடிய சென். ஜோன்ஸ் கல்லூரி 136 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

இப்போட்டியில் முதல் இனிங்ஸ் ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ், சகல விக்கெட்டுகளையும் இழந்து 148 ஓட்டங்களைப் பெற்றது. இதில் விபுலானந்தா 33 ஓட்டங்களும், சுரேந்திரா 14 ஓட்டங்களும், குலநாதன் 16 ஓட்டங்களும், முத்தசம்பி 39ஓட்டங்களும் மகாலிங்கம் 16 ஓட்டங்களும் பெற்றனர். இக்கட்டத்தில் கண்டிப் பந்தெறி வீரஜன ராஜகருணா 55 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 5 விக்கெட்டுகளை வீத்தினர்.

சென். சில்வஸ்டர் துடுப்பெடுத்தாடிச் சகல விக்கெட்டுகளையும் இழந்து 80 ஓட்டங்களைப் பெற்றனர். இக்கட்டத்தில் சென். ஜோன்ஸ் பந்தெறி வீரர்களான எம். சுரேந்திரா, டி. எஸ். மில்ஸ் முறையே 15, 3 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர். குலநாதன் 15 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இரண்டாம் இனிங்ஸ் ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் 8 விக்கெட்டுகளை இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சிவபாலன் 15 ஓட்டங்களும் விபுலானந்தா 61 ஓட்டங்களும், சுரேந்திரா 55 ஓட்டங்களும் பெற்றனர். இக்கட்டத்தில் கண்டி பந்தெறி வீரரான குணதிலகா 45 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 7 விக்கெட்டுகளை விழ்த்தினர்.

சென். சில்வஸ்டர் துடுப்பெடுத்தாடி சகல விக்கெட்டுகளையும் இழந்து 113 ஓட்டங்களைப்பெற்றது. இதில் என். சிலிகல 30 ஓட்டங்களும், எஸ். பவுதீன் 23 ஓட்டங்களும், எப். பவுதீன் 19ஓட்டங்களும் பெற்றனர். இக்கட்டத்தில் சென். ஜோன்ஸ் பந்தெறி வீரர்களாகிய எம். சுரேந்திரா 18ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 3 விக்கெட்டுகளும், வாமதேவன் 21 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 2விக்கெட்டுகளும் நவரத்தினராசா 7 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 2விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

வி. நி.

சென்ஜோன்ஸ்— மத்திய கல்லூரி

# கிரிக்கெட் போட்டிக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

இம்மாதம் 19-ம், 20-ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரிகளினது கிரிக்கெட் போட்டியைமுன்னிட்டு வடபகுதி பொலிஸார் பலத்த கண்காணிப்புச் செலுத்தவிருக்கின்றனர்.

இது சம்பந்தமாக இரு கல்லூரிகளின் அதிபர்களுமான திருவாளர்கள் இ. சபாலிங்கமும் கே. பூரணம் பிள்ளையும் வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டனுடன் பேச்சு வார்த்தை நடத்தினார்கள் இதனைத்தொடர்ந்து உதவிப்பொலிஸ் சுப்பிரிண்டன் திரு ஆர் சி. தவராஜாவின் மேற்பார்வையில் சுமார் 50 பொலிசார் இங்கு கடமையாற்றுவார்கள் என அறிவிக்கப்படடுள்ளது

வெடிகள் கொளுத்த, கூட்டம் கூட்டமாக லைசிக்கிள்களிலும் வாகனங்களிலும் சென்று கோஷித்தல் ஆகியன சட்டத்துக்கு முரணானதாகக் கண்காணிக்கப்படும். [கா. தி]

## தபால் அத்தியட்சகருக்கு மகஜர்

ஊர்காவற்றுறை, சனி

சரவணை உப தபாற் கந்தோருக்குப் பொதுமக்களால் அனுப்பப்படும் காகக்கட்டளை, தபாற்கட்டளை என்பவற்றை மாற்றுவதில் தாமதம் ஏற்படுவதால் பொதுமக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனராம். இதுசம்பந்தமாகச் சரவணை கிராம முன்னேற்றச் சங்கம் நிறைவேற்றிய தீர்மானத்திற்கிணங்க தபால், தந்தி அத்தியட்சகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.


ராதா மணிமார்க்

சந்தனாதித் தைலம்

கூந்தல் உதிர்வதையும், இளநரையையும் தடுத்து, கூந்தலை நீண்டதாகவும், அடர்த்தியாகவும், பளபளப்பாகவும் வளரச் செய்யும்.

தினந்தோறும் தலையில் தேய்த்துவருவதனால் தலையிடி, கபாலஇடி, ஓயாத தும்மல், பீனிசம், கண்களிலிருந்து நீர் வடிதல், நித்திரையின்மை முதலிய சிரநேத்திர நோய்களைக் குணப்படுத்தும். அநேக விலை உயர்ந்த மூலிகைகளைச் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட ஓர் ஒப்பற்ற கூந்தல்தைலம்.

எங்கும் இடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-

ராதா பெர்பியூமறி அன் ராதா புறடக்ஸ்
(Radha Perfumery & Radha Products)

ஏகவிநியோகஸ்தர்கள்:-

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

(மருந்து, மருந்துச்சரக்கு, வாசனாதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.)

58, கே. கே. எஸ். றோட், பெரியகடை, யாழ்ப்பாணம்.
''பாலேந்திரா பில்டிங்'' 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.

போன்: 5 4 1 Residence: 7 0 6 8


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நூறுக்கு மேற்பட்டவர் உணவருந்தக் கூடாது

## இன்று முதல் சட்டம் அமுல்

யாழ்ப்பாணம் ஞாயிறு இன்று முதல் அமுலாக்கப்பட விருக்கும் அரசாங்கத்தின் அவசரகால உணவுச் சிக்கன சட்டவிதிகளின் படி 100 பேருக்கு மேற்பட்டவர்கள் விசேஷ வைபவங்களில் இரவு விருந்து மதியபோசன விருந்து. காலைவிருந்து ஆகிய வற்றில் உணவு அருந்தாதவாறு பார்த்துக் கொள்ளுமாறும் இச்சட்டவிதிகள் சீராக அமுல்நடத்தப்பட உழைக்குமாறும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. ஈ. எல். அபயகுணவர்தன சகல பொலிஸ் சுப்பிரிண்டன்டன்களையும் சுற்றுநிருபம் மூலம் கேட்டுள்ளார்.

இந்த சுற்று நிருபத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது.

திருமண வைபவங்கள், மற்றும் விருந்துவைபவங்கள் ஆகியவற்றில் வீணான ஆட்கள் கூடுவதையும் செலவைக்கட்டுப்படுத்தவுமே இவ்வித சட்டம் அமுலாக்கப்படவிருக்கிறது என்பதை இங்கு குறிப்பிடவிரும்புகின்றேன்.

பின்வரும் வைபவங்களில் நூறு பேருக்கு மேற்பட்டவர்கள் கூடுவதற்கு விலக்களிக்கப்பட்டுள்ளது

கிரிக்கெட் போட்டி, விவசாய வேலைகளுக்கு விவசாயியால் கூட்டப்படும் வைபவம், சிரமதான இயக்கம், சமயச் சடங்கு, பிச்சைக்காரர்களுக்கு அன்னதானம் வழங்குவது, புத்தபிக்குகளுக்குத் தானம் வழங்குவது ஆஸ்பத்திரியிலுள்ளவர்களுக்கும் அனாதைச்சிறுவர் இல்லத்திலுள்ளவர்களுக்கும் தானம்வழங்குவது, சமய மற்றும் தர்ம வைபவங்கள், ராஜிய விஜயங்கள் சம்பந்தப்பட்ட வைபவங்களுக்கும்விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது. [கா. நி]

## மூவர் கைது

வல்வெட்டித்துறை, சனி

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பொன்னையா நடராசா என்பவருடைய வீட்டில் தங்கநகைகள் களவு போனதைத் தொடர்ந்து அதே இடத்தைச் சேர்ந்த மூன்று நபர்கள் வல்வெட்டித்துறை பொலிஸ் சார்ஜண்ட் திரு. இராசையா வால் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டுவருகின்றனர்.

## நீர்பற்றி கருத்தரங்கம்

உடுவில், சனி

சுன்னாகம் பட்டின சபையின் ஆதரவில் நடைபெற்று வரும் நூல்நிலைய ஆராய்வுக் கருத்தரங்கம் இம்மாதம் 12-ம் திகதி நடைபெறும்.

சுன்னாகம் பட்டின சபை நூல்நிலைய வளவில் நடைபெற இருக்கும் இக்கருத்தரங்கில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் கலாநிதி டாக்டர் லூதர் ஜயசிங்கம் ''யாழ்ப்பாண மாவட்டத்தில் தரைகீழ் நீர்'' என்னும் விஷயம்பற்றி பேசுவார். தொடர்ந்து அதுபற்றிய கருத்துப்பரிமாறல் நடைபெறும்.

நீர்ப்பாசனஎன்ஜினியர்கள்

## 17 பேர் தமிழர்

கொழும்பு, சனி

நீர்ப்பாசனப்பகுதிக்குபுதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள 24 நீர்ப்பாசன என்ஜினியர்களின் பெயர்களை பொதுசேவைகள் கமிஷன் அறிவித்துள்ளது. இவர்களில் 17 பேர் தமிழர்கள். 6 பேர் சிங்களவர்கள் ஒருவர் முஸ்லிம்.

நீர்ப்பாசனப்பகுதிடைரக்டராக திரு. வி. என். ராஜரட்னம் நியமிக்கப்பட்டுள்ளார்.

### மொழி பெயர்ப்பு சுப்பிரண்டன்கள்

உத்தியோகமொழி இலாகாவில் மொழிபெயர்ப்புப் பகுதியில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மொழிபெயர்ப்பு சுப்பிரண்டன்மார் இருவரின் பெயர்கள் வருமாறு;

திரு. சி. நடராசா, திரு. எஸ். சரவணமுத்து.

# மயக்க நிலையில் ரயில் சாரதி மரணம்

## விசாரணை தொடர்கிறது

யாழ்ப்பாணம், ஞாயிறு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த எண்ணை ரயில் வண்டியின் சாரதி ஒருவர் மயக்க நிலையில் காணப்பட்டு, யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு நேற்று காலமானார்.

கடமையாற்றிக்கொண்டிருந்த 6 பிள்ளைகளின் தந்தையான சாரதி கே. துரைராசா (வயது 45) யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்தை அடைந்தபோது மயக்கமுற்றநிலையில் காணப்பட்டதாகவும், உடனடியாக யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மயக்கமுற்ற நிலையிலேயே மரணமானாரெனவும் மரண விசாரணையில் தெரிவிக்கப் பட்டது.

ரயில் கார்டாகக் கடமையாற்றிக்கொண்டிருந்த திரு. ஏ. ம பெரேராவும், தீயணைப்புப் பகுதியைச் சேர்ந்த (பயர்மன்) திரு. எல். அமரசூரியாவும் சாட்சியமளிக்கையில் மரணமான கே. துரைராசா அனுராதபுரத்தில் தமது கடமையைப் பொறுப்பேற்றதாகவும், யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்தை ரயில் வண்டி அடைந்தசமயம் அவர் மயக்கமுற்றநிலையில் இருக்கக் காணப்பட்டு யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதித்தாகவும் தெரிவித்தனா விசாரணை தொடர்கிறது. (கா. நி)

# யோகி ராமையா இலங்கை விஜயம்

மருதானை, சனி

உலக யாத்திரை மேற்கொண்டு ஆஸ்திரேலியாவுக்கும் அமெரிக்காவுக்கும் விஜயம் செய்யும் மார்க்கத்தில் யோகி ராமையா இன்று கொழும்புவந்து சேர்ந்தார்.

அவர் இங்கு 15-ம் திகதி வரை தங்கி யோகாசனம் பயிற்சிகள் அளிப்பார்.

தூரகிழக்கு நாடுகள் பலவற்றுக்கும் விஜயம் செய்து அங்குள்ள மக்களுக்கு யோகாசனத்தின் மகிமையையும் பயனையும் யோகி ராமையா சாதனைகள் மூலம் விளக்கியுள்ளார்

சித்தயோக நுற்பங்களில் ஆஸ்திரேலியமக்கள் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்றும் யோகாசனத்துக்கு மதக்கட்டுப்பாடுகள் இல்லையென்றும் எம்மதத்தைச் சேர்ந்தவர்களும் இதனைப்பயின்று மிகுந்த பயன்பெறமுடியும் என்றும அவர் கூறினார்.

யோகி ராமையா இதுவரை 45 நூல்கள் எழுதியிருப்பதாகவும் 'ஈழநாடு' நிருபரிடம் தெரிவித்தார்.

## 10 பேர் பலி

விஜயவாடா, மார்ச் 9

விஜயவாடாவில் திருப்பதிக்கு சென்று கொண்டிருந்த ஒரு பஸ் வண்டி சென்னைக்கு போகும் கடுகதி ரயில் வண்டியில் மோதியதால் 10 பேர் கொல்லப்பட்டார்கள். 44 பேர் படுகாயமடைந்தனர்.

## தபாற்கந்தோர் விடுமுறை

கொழும்பு, சனி

அஞ்சல் தந்திப்போக்குவரத்து அலுவலகங்களுக்கு ஈதுல் அழ்கா [ஹஜ்ஜுப் பெருநாள்] தினமாகிய இன்று ஒரு விடுமுறை நாளாகும். இத்தினத்தில் சகல அஞ்சல் அலுவலகங்களிலும் கருமங்கள் போயா தினம் போன்று நடைபெறும்.

## முடிவை மாற்ற கோரிக்கை

திருக்கோணமலை, சனி

இலங்கையின் வெளிநாட்டுத் தூதுவராகப் பாகிஸ்தானுக்கு சேர். ரசீக் பரீத்தை அனுப்புவது என அரசாங்கம்செய்துகொண்டமுடிவை மாற்றிக்கொள்ளுமாறு கிண்ணியா கிராம சபைத் தலைவர் ஜனாப் அலியார் தம்பி பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்காவைக் கேட்டுக் கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

அகில இலங்கை சோனகர் சங்கத்தின் ஆயுட்காலத் தலைவராகவும், இலங்கையில் உள்ள சகல மதத்தினரையும் சாதி, சமய, வேறுபாடின்றி ஒற்றுமைப்படுத்த முயலும் சேர். ரசீக் பரீத் இலங்கைத் தீவைவிட்டுப் பாகிஸ்தானுக்குச் செல்ல விரும்பது சோனக சமுதாயத்தினருக்கு மட்டுமன்றிப் பொதுவாக இலங்கை மக்களுக்கே அளப்பரிய கஷ்டத்தைக் கொடுக்குமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரதிநிதிகள் சபையில்

# ஜா-எல எம். பி. குழுக்களின் தலைவர்

கொழும்பு, சனி

ஜா-எல எம். பி. திரு. பாரிஸ்பெரேரா பிரதிநிதிகள் சபையில் குழுக்களின் உபதலைவராகதெரிவு செய்யப்பட்டார். இவருக்கு 50 வாக்குகள் கிடைத்தன. அவரை எதிர்க்கட்சியின் சார்பில் எதிர்த்துப்போட்டியிட்ட மூதூர் இரண்டாவது எம். பி. ஜனாப் அப்துல் மஜீத் 28 வாக்குகள் பெற்றார்.

குழுக்களின் உபதலைவராக இருந்துவந்த உடுப்பிட்டி எம். பி. திரு எம். சிவசிதம்பரம் உப சபாநாயகராக தெரிவு செய்யப்பட்டதால் அந்தப் பதவிக்கு திரு. பாரிஸ் பெரேரா தெரிவு செல்யப்பட்டிருக்கிறார்.

# முருகக்கல், களிமண் உபயோகிக்கதொழிற்சாலைகள்

## வடபகுதியில் உருவாகும்

யாழ்ப்பாணம், ஞாயிறு வடபகுதியில் அதிகமாகக் காணப்படும் முருகக்கல்லை உபயோகப்படுத்தும் புதிய கைத்தொழிற்சாலை ஒன்றை இங்கு அமைப்பதற்கான சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகிறது.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்த கைத்தொழில் கூட்டுத்தாபனத் தலைவர் இங்குள்ள சில கைத்தொழில் ஸ்தாபன அதிபர்களிடம் இத்தகவலைத் தெரிவித்தார். இங்குள்ள கடற்கரைப் பிரதேசத்தில் அதிகமாகக் காணப்படும் முருகக்கற்களை உபயோகப்படுத்தக்கூடிய கைத்தொழிற்சாலையை இங்கு அமைக்கக்கூடிய வாய்ப்புகளையும் அவர் இங்கு தெரிவித்தார்.

இதுதவிர இங்குள்ள களிமண்ணை மூலப்பொருளாக வைத்து. கூட்டுத்தாபன அமைப்பில் ஒரு கைத்தொழில். மட்பாண்டத்தொழிற்சாலை பிரமாண்டமான முறையில் அமைக்கக்கூடிய வழிவகைகளையும் அவர் இங்கு குறிப்பிட்டார். இத்தொழிற்சாலைகளைவடபகுதியில்அமைத்தால்அரசாங்கம் சிறுகைத்தொழில் கூட்டுஸ்தாபனம்மூலம்பலசலுகைகளையும் இயந்திர சாதனங்களையும் இதற்கு வழங்கலாமெனவும் இப் பேச்சுவார்த்தையில் தெரிவிக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

அச்சுவேலியில் அமைக்கப்பட விருக்கும்கைத்தொழில் பேட்டையில் இத் தொழில்களையும் சேர்த்து உற்பத்தி செய்ய இங்குள்ள கைத்தொழிற்சாலை அதிபர்கள் எண்ணியுள்ளனர். இங்குள்ள மூலப் பொருட்களை உபயோகித்து பொருட்களை உற்பத்தி செய்வதற்கு அரசாங்கம் கூடிய சலுகை அளிப்பதாக ஏற்கனவே அறிவித்திருந்தது குறிப்பிடக்கதாகும். (கா. நி)

## கூப்பன் யாருடையவை?

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் எட்டுக்கூப்பன்கள் திரு. ஆ. கறுப்பையா என்பவரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

## வடக்கு கிழக்கில் நிலபிரபுக்கள்

கொழும்பு. சனி

வடக்குகிழக்கு மாகாணங்களில் 'நிந்தகம்' காணிகள் மசோதா அமுல்நடத்த முடியாது என்று சிலர் கருதுகிறார்கள். ஆனால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பெரிய நிலச்சுவாந்தார்கள் இருக்கிறார்கள். இவர்கள் ஏழை விவசாயிகளை சுரண்டுகிறார்கள் என்று கொழும்பு தெற்கு இரண்டாவது எம். பி. திரு. பெர்னாண்ட் சொய்சா இன்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் கூறினார்.

இந்த மாதிரி பிரச்சினைகளை தங்கள் சோஷலிஷ ஆட்சி மூலம்தான் தீர்க்க முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

## புத்தளத்தில்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தின் ஒரு பகுதியின் கூரை வீசப்பட்டுவிட்டது. சகிரா மகாவித்தியாலயத்திற்கு சுமார் 1000 ரூபாவிற்கு மேற்பட்ட சேதம் ஏற்பட்டுள்ளது. இவ்வித்தியாலய [illegible] பெரியம் பாதிக்கப்பட்டது.

யாழ்மறியற்சாலை

## கைதி தப்பி ஓடினர்

யாழ்ப்பாணம், ஞாயிறு சைக்கிள் களவு சம்பந்த மாகவவனியா நீதிமன்றத்தில் 3 மாதக்கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் மறியற்சாலையில் இருந்த கைதி கான் என்பவர் நேற்று தப்பி ஓடிவிட்டார் எனத் தெரிகிறது யாழ்ப்பாணம் கச்சேரி பழைய பூங்காவைச் சுத்தம் செய்யும் வேலையில் ஈடுபட்டிருந்தசமயமே இவர் ஓடிவிட்டதாக பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது, இதுபற்றிச் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் தகவல் கொடுக்கப்பட்டுள்ளது, மறியற்சாலை சுப்பிரின்டன் திரு. ஜயன்ட் இதுபற்றிய விசாரணையில் ஈடுபட்டுள்ளார். [கா. நி]

## இலங்கை வரும் வைத்தியசாலை கப்பல்

கொழும்பு, சனி

அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கு வந்துகொண்டிருக்கும் ஹோப் என்னும் சமுத்திரத்தில் நடமாடும் வைத்தியசாலைக் கப்பல் ஏப்ரில் மாதமளவில் கொழும்பை வந்தடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இக்கப்பல் சில தினங்கள் இலங்கையில் தங்கி சிகிச்சையளிக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு மார்ச்மாதம் 10-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org